871

# கல்கி



KALKI நவம்பர் 2, 1947 4 அணா

## சுதந்திர தீபாவளி

மலிந்த விலையில்

2000 டிசைன்களில் பட்டாடைகள்
4000 டிசைன்களில் நூல் ஆடைகள்

*தீபாவளிக்காக புதிய டிசைன்களில் உயர்தர கொள்ளேகாலம் பட்டினலும், 100, 80, 60, நெ. நூல்களிலும் உத்திரவாதமான கெட்டிச் சாயம் போட்டு ஸ்பெஷலாக தயாராகி வந்து கொண்டிருக்கின்றன.*

*பெங்களூர், பெனாரஸ், பெங்கால், கொள்ளேகாலம், ஆரணி. காஞ்சீபுரம், பட்டு சேலைகள் அற்புதமான பார்டர்கள், வசீகரமான முந்திகளுடன் 5, 6, 7, 8, 9, 10 கெஜங்களில் திறமையான நெசவாளர்களால் நிபுணர்களின் மேற்பார்வையில், உயர்தரமாக நெய்யப்பட்டு வந்து குவிந்துள்ளன.*

*நூல் சேலைகள் உறையூர், கோயம்புத்தூர், மதுரை, சேலம், அம்மாசத்திரம், வங்காரம் பேட்டை ஜம்மல்மடுகு முதலிய ஊர்களிலிருந்து புதுப்புது டிசைன்களில் அழகான பார்டர்கள், நேர்த்தியான முந்திகளுடன் கண்கவர் கலர்களில் 5, 6, 7, 8, 9 கெஜங்களில் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.*

*சேலம், துயிலி, மதுரை, மெல்லிய நூல் வேஷ்டிகள், ஜரிகை துப்பட்டாக்கள், அங்கவஸ்திரங்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள் ஆயிரக்கணக்கான டிசைன்களில் வந்து குவிந்துள்ளன.*

பட்டுச் சேலைகள் ரூ. 17-0-0 முதல் 700 வரை
நூல் சேலைகள் ரூ. 7-12-0 முதல் 70 வரை

*ஏழைகள் பணக்காரர்கள் எல்லோருக்கும் பொருத்தமான விலைகள்.*

சகாயமான விலைகள் நேர்த்தியான ரகங்கள்

இன்றே வந்து பார்வையிடுங்கள்

## கஸ்தூரிபாய் கம்பெனி

உயர்தர பட்டு நூல் ஜவுளி வியாபாரிகள்

மேல வீதி :: சிதம்பரம்

## தி இந்தியன் பாங்க் லிமிடெட்

★

**தலைமை ஆபீஸ் :**

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000
ரிசர்வ நிதி ரூ. 60,72,602

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி










# கல்கி

## பொருளடக்கம்

மலர் 7 } இதழ் 14 } நவம்பர் 2 ... ஐப்பசி 17

| | | |
|---|---|---|
| என்ன சேதி? | ... | ... 5 |
| வாருங்கள், வாருங்கள்! | சாஸ்திரி | ... 7 |
| மயக்கம் தெளிகின்றது! | ... | ... 10 |
| தாமரை மலர்ந்தது! | ... | ... 14 |
| படித்துப் பார்! | | ... 17 |
| உன் துன்பம் என்னதே! | டி. கே. சி. | ... 18 |
| வசுமதியின் தியாகம் | குடாலை | ... 21 |
| பாரதி மண்டப விழா | ஸ்ரீமதி சகுந்தலா பாரதி | ... 24 |
| மீனம்பட்டி மிராசுதார் | லக்ஷ்மீதரன் | ... 26 |
| நாவன்மை | க. ரா. | ... 33 |
| பாப்பா மலர் | விஜயம் | ... 36 |
| ஒரு கடிதம் | எஸ். வி. எஸ். | ... 38 |
| சந்திர ஹாரம் | பிரேம்சந்த் | ... 43 |
| கவலை தீர்ந்தது! | ராஜ் | ... 52 |
| காலக்ஷேபம் | ... | ... 53 |

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

தற்போது அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருக்கும் காஷ்மீர சமஸ்தானத்துக்குப் போய், அங்குள்ள மக்களிடம் "ஷேக் முகம்மது அப்துல்லாவை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டால், அவர்கள் மூக்கின்மேல் விரலை வைத்து, "அது யார், அது! ஷேக்காவது, முகம்மதாவது, அப்துல்லாவாவது! எங்களுக்குத் தெரியவே தெரியாதே!" என்பார்கள் என்பது நிச்சயம். ஆனால், அதே மக்களைப் பார்த்து "'ஷேர்—இ—காஷ்மீர்' அதாவது 'காஷ்மீர சிங்க'த்தை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டால், அவர்கள் மறுபடியும் மூக்கின்மேல் விரலைவைத்து, "நன்றாயிருக்கிறது, இது கூடவா. எங்களுக்குத் தெரியாது! நீங்கள் யார் ஐயா இந்த மாதிரியாகக் கேட்பதற்கு? உங்கள் பெயர் என்ன?" என்று நம்மையே வியப்புடன் கேட்பார்கள் என்பதும் நிச்சயம்.




ஆம், ஷேக் அப்துல்லாவைக் காஷ்மீரில் யாருக்கும் தெரியாது. 'காஷ்மீர சிங்கம்' என்று சொன்னால்தான் அந்த மக்களுக்குத் தெரியும்.

வல்லமை வாய்ந்த ஒரு பெரிய சமஸ்தானத்தைத் தன்னந் தனியாக எதிர்த்துப் பொறுப்பாட்சி இயக்கத்தை ஆரம்பித்த ஷேக் அப்துல்லாவைச் 'சிங்கம்' என்று மாத்திரம் சொன்னால் போதாது. அதைவிடச் சிறந்த ஒரு வீர அடைமொழி இருக்குமானால் அதற்கும் அவர் தகுதியானவர் என்றே சொல்ல வேண்டும்.

ஷேக் அப்துல்லா உத்தம தேசபக்தர்; பண்டித நேருவின் அருமை நண்பர்; அகில இந்திய சமஸ்தான மக்கள் மகா நாட்டுத் தலைவர்.

ஷேக் அப்துல்லாவின் லட்சியமாகிய பொறுப்பாட்சிக் கோரிக்கை இன்று ஒருவகையாகப் பலித்திருக்கிறது. அவருடைய தலைமையின் கீழ் ஒரு இடைக்கால சர்க்காரை அமைக்கும்படியாகக் காஷ்மீர சமஸ்தான சர்க்கார் கேட்டுக் கொண்டிருப்பது அவருக்கு ஒரு பெரிய வெற்றி என்றே சொல்ல வேண்டும்.

ஷேக் அப்துல்லாவைப்போல நேர்மையும் திறமையும் ராஜதந்திரமும் மிக்க ஒரு தலைவரைப் படைத்த காஷ்மீர மக்கள் பாக்கியசாலிகள் என்பதில் சந்தேகம் இல்லை.

அவருடைய தலைமையின் கீழ் அமைக்கப்படும் இடைக்கால சர்க்கார் வெற்றிகரமாக நடந்து, முடிவில், காஷ்மீர் மக்கள் மகாராஜாவின் தலைமையின் கீழ் பரிபூரணப் பொறுப்பாட்சியை அடைவார்கள் என்று நம்புகிறோம்.

** ** **

ஷேக் அப்துல்லா சமீபத்தில் டில்லிக்கு வந்தபோது, டில்லி விமான நிலையத்தில் எடுத்த படம் இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறது.

ஷேக் அப்துல்லாவின் கரங்களில் அமர்ந்திருக்கும் சிறுவன், பண்டித நேருவின் செல்வப் பேரன் — இந்திரா காந்தியின் புதல்வன்.



# பாலர் மலர்

## தீபாவளி இதழ்

அழகான வர்ணப் படங்கள், அறிஞர்களின் கதைகள், கவிதைகள் கட்டுரைகள், வேடிக்கைப் படங்கள் முதலியவற்றுடன்

பெரிய அளவில், அதிகப் பக்கங்களுடன் வெளிவருகிறது.

தனிப் பிரதி ரூ. 1—0—0
தபால் மூலம் ரூ. 1—4—0

பாலர் மலர் (மாத மிருமுறை)
சந்தா விபரம்: வருஷம் ஒன்றுக்கு ரூ. 1-8-0 தனிப்பிரதி அணு 0-1-0

பாலர் மலர், புதுக்கோட்டை

# ஹிண்ட் ஸில்க்

தீபாவளியை உத்தேசித்து புதிய ஸ்டாக்குகள் பாக்டரியிலிருந்து நேரிடை வந்துள்ளன!

பிரிண்டட் பட்டுப் புடவைகள், இதர உடுப்பு ஜவுளிகள் நீடித்த கலர்களில் அதி நூதன டிசைன்களில் கொள்ளேகாலம்; மைசூர் பட்டில் தயாரிக்கப்பட்டது பெங்கால் பட்டைவிட அதி சிறந்தது

★

## ஹிந்துஸ்தான் பாப்ரிக்ஸ்

246, பூனமல்லி ஹை ரோடு
பெரியமேட்டு :: மதராஸ்-3

தலைமை ஆபீசும் பாக்டரியும்: குடியாத்தம்






# என்ன சேதி?

## சிறந்த அஸ்திவாரம்

நமது 'காருண்ய' பிரிட்டிஷாரின் ஆட்சியால் இந்தியாவுக்கு ஏற்பட்ட 'நன்மைகள்' கொஞ்ச நஞ்சமல்ல. தொண்ணூறு சத விகிதம் விவசாயிகளும் கைத்தொழில் வேலைக்காரர்களும் அடங்கிய இந்த மாபெரும் தேசம், உணவுக்கும் உடைக்கும் மாத்திரமா பிற நாடுகளின் தயவை எதிர்பார்க்கும்படி நேர்ந்திருக்கிறது? அந்த உணவையும் உடையையும் கொண்டுவரும் கப்பல்களுக்குக் கூட மற்ற நாடுகளின் தயவையே நாடும்படியான துர்ப்பாக்கிய நிலைமையில் இருக்கிறது!

சமீபத்தில் சுதந்திர இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட தானியப் பரிசீலனைக் கமிட்டியார், உணவுப் பொருள்களுக்குக் கூட மற்ற நாடுகளை எதிர்பார்க்கும் கேவலமான நிலைமையில் இந்தியா இனியும் இருந்துவரக் கூடாதென்று கூறியிருப்பது மிகவும் முக்கியமான விஷயமாகும். வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதியாவதை அடியோடு குறைத்து விட வேண்டுமென அவர்கள் சிபார்சு செய்திருக்கின்றனர். அதே சமயம், இந்தியாவுக்குச் சொந்தமாகக் கப்பல்கள் வாங்கவும் நிர்மாணிக்கவும் இந்திய சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டிருப்பது, இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்துக்குச் சிறந்த அஸ்திவாரமாகும்.

## இனி கவலையில்லை

அன்னியர்களும் அதிசயிக்கத் தக்க இந்திய நெசவுத் தொழிலை இருந்த விடந் தெரியாமல் ஒழித்த 'பெருமை' பிரிட்டிஷாருக்கே உரியதென்பது சரித்திரப் பிரசித்தமாகும். அது போலவே இந்தியாவின் கப்பல் தொழிலையும் பிரிட்டிஷார் பாழாக்கினார்கள். பிரிட்டிஷ் கப்பல்களைத் தவிர மற்றக் கப்பல்களில் இந்தியாவுக்கு வரும் சாமான்களுக்கு இறக்குமதி வரியை இரட்டிப்பு ஆக்கினார்கள். அதனால் இந்தியக் கப்பல்கள் நசித்தன. பிறகு, வெகு காலம் வரையில் இந்தியாவில் பிரிட்டிஷ் கம்பெனியால் நடத்தப்பட்டு வந்த கப்பல் நிர்மாணத் தொழிலைக்கூட பிரிட்டிஷார் நிறுத்தி விட்டார்கள். 4500 மைல்கள் நீளமுள்ள இந்தியக் கடலோரத்தில்கூட, அதாவது உள் நாட்டில்கூட இந்தியக் கப்பலுக்கு இடமில்லாமற் போயிற்று! அந்தத் தொழிலை உய்விக்க தேச பக்தர்கள் செய்த முயற்சிகளும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் அக்கிரமம் காரணமாகத் தோல்வியுற்றன. எனினும், இன்றைய நிலைமை முற்றிலும் வேறல்லவா? இந்தியாவுக்கே கதி மோட்சம் ஏற்பட்டிருக்கும் போது, இந்தியத் தொழில் துறைகளுக்கும் கதி மோட்சம் ஏற்பட்டுத் தானே தீர வேண்டும்?

இந்தியாவில் கப்பல் வியாபாரப் போக்குவரத்தை அதிகப்படுத்துவதற்காகக் கூடிய சீக்கிரம் இந்திய சர்க்கார் பிரதிநிதிகளும் இந்தியக் கப்பல் முதலாளிகளும் அடங்கிய ஒரு மகாநாடு நடைபெறப் போகிறது. அதன் பயனாக, 1948-ம் வருஷத்துக்குள் இந்தியாவுக்குச் சொந்தமாக மொத்தம் மூன்றரை லட்சம் டன்னுள்ள கப்பல்கள் இருக்குமென்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. சென்ற மகா யுத்தத்துக்கு முன் உலகிலுள்ள மொத்தக் கப்பல்களில் மூன்றிலொரு மடங்கு பிரிட்டனிடம் இருந்தன; அதாவது மொத்தம் இரண்டரைக் கோடி டன்னுள்ள ஆயிரக்கணக்கான கப்பல்கள் பிரிட்டனுக்குச் சொந்தமாக இருந்தன. ஆனால், இந்தியக் கப்பல் தொழிலை நசுக்கிய வினைதானோ என்னவோ, சென்ற யுத்தத்தின்போது மேற்படி பிரிட்டிஷ் கப்பல்களில் பெரும்பாலும் பாதாள உலகத்துக்குச் சென்றுவிட்டன! எனினும் அதற்காக பிரிட்டன் சோர்வடைந்து விடவில்லை. அது இப்போது மீண்டும் கப்பல் கட்டுவதில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

மற்ற சுதந்திர நாடுகளுடன் ஒப்பிடும்போது மூன்றரை லட்சம் டன் கப்பல்கள் மிக மிகச் சொற்பமேயாகும். இருந்தாலும் இந்தியாவுக்குச் சொந்தமாக கப்பல் நிர்மாணத் தொழிலும், கப்பல் போக்குவரத்தும் ஆரம்பமாகிவிட்ட தென்பதுதான் பெரிய காரியம். எனவே, இன்னும் சில வருஷங்களில் இந்தியாவுக்குச் சொந்தமான கப்பல்களின் தொகை, ஒன்று பத்து நூறாகப் பெருகிவிடுமென எதிர்பார்க்கலாம்.

## விசித்திரப் பஞ்சம் !

'நாலாபுறத்திலும் தண்ணீர், எங்கு பார்த்தாலும் தண்ணீர், கண்களுக்கெட்டிய வரையில் தண்ணீர்! ஆனல், குடிக்க ஒரு சொட்டுக்கூட இல்லே !' என்று ஒரு மாலுமி தவித்ததாக ஆங்கிலக் கவிதை ஒன்றுண்டு. ஆபத்தில் சிக்கி நடுக் கடலில் சென்று கொண்டிருந்த மாலுமிக்குக் குடிக்க ஒரு சொட்டுத் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கும்? இன்று காப்பி குடிப்பவர்களின் நிலேமையும் அம்மாதிரியாகவே இருக்கிறது.

காப்பிக் கொட்டைக்கு இந்தியா பிற நாடுகளே எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லே. இந்தியாவிலேயே தேவைக்கு அதிகமாகக் காப்பிக்கொட்டை விளேவதால் இங்கிருந்து ஏற்றுமதியும் செய்கிறர்கள். வியாபாரிகளிடமும் ஏராளமாகக் காப்பிக் கொட்டை 'ஸ்டாக்' இருப்பதாக இந்திய காப்பி போர்டார் கூறுகின்றனர். எனவே, தேவைக்கு அதிகமாகக் காப்பிக்கொட்டை இருக்கிறதென்பது நிச்சயம். அப்படியிருந்தும் தினசரி ஆயிரக் கணக்கான ஜனங்கள் அரைப் பவுண்டு காப்பிப் பொடிக்காகக் கால் கடுக்க வெகு நேரம் 'க்யூ'வில் நின்று தவம் புரியும் நிலேமை ஏற்பட்டிருப்பதேன்? சென்ற பல வாரங்களாக இத்தகைய நிலேமை நீடித்து வருவதற்குக் காரணமென்ன?

மைசூரில் ஏற்பட்ட ரயில்வே தொழிலாளர் வேலே நிறுத்தத்தினுல்தான் காப்பிக் கொட்டை வரவில்லே என்று ஒரு காரணம் கூறப்பட்டது. ஆனல், மேற்படி வேலே நிறுத்தம் தீர்ந்து எத்தனேயோ வாரங்களாகி விட்டன. எனவே, அந்தக் காரணம் வெறும் சால்ஜாப்பு என்பது இப்போது வெளியாகி விட்டது. தேவைக்குப் போதிய விளேவு இல்லாத பொருள்களுக்குத்தான் இன்று பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. தேவைக்கு அதிகமாக இங்கேயே உற்பத்தியாகும் பொருளுக்கும்,—பிற நாட்டுக்கு ஏற்றுமதியாகும் அளவுக்கு அதிகமாக விளேயும் பொருளுக்கும் பஞ்சம் ஏற்படுவது விசித்திரமல்லவா?





நவராத்திரி

விசேஷ விற்பனே

பண்டிகைக்காக

புது மாதிரியான

உயர்ந்தரக

பட்டு & நூல்

ஜவுளிகள்

கிடைக்குமிடம் :

கிருஷ்ண ஸில்க் ஹவுஸ்

1, சன்னதி தெரு, மைலாப்பூர், மதருஸ்-4



காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்!





நன்றி கெட்ட, எஜமானருக்காகப் பாடுபட்டதன் பலன்!
நிஜாம்
ஹைதராபாத்-இந்தியா ஒப்பந்த நகல்


முன்னேற்ற முறைகளுக்கு முட்டுக்கட்டை போடும் பிரிட்டிஷ் லார்டு சபையின் அதிகாரத்தைக் குறைப்பதற்காக பிரதம மந்திரி அட்லி பார்லிமெண்டில் ஒரு மசோதா கொண்டு வருகிறார்.— பத்திரிகைச் செய்தி
சரியான சிகிச்சை
பெவின்
கிரிப்ஸ்
மாரிசன்
லார்டு சபை




ஐக்கிய மாகாணத்தில் பல முஸ்லிம் லீகர்கள் லீக்கை விட்டு விட்டு காங்கிரசில் சேர்ந்துள்ளனர்.— பத்திரிகைச் செய்தி
வாருங்கள், தீ பரவுமுன் இதில் குதித்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
தேசீய முஸ்லிம்கள்
காங்கிரஸ்
பாகிஸ்தான் பிரசாரம்


கயிறு திரிக்கும் வெளிநாட்டு நிருபர்கள்
ஐ.நா.சபை
பாரபட்சம்
துவேஷ் பிரசாரம்
பொய்

# மயக்கம் தெளிகின்றது!

இந்த உலகத்தையும் உலக மக்களையும் ஆட்டிவைக்கும் நவக்கிரகங்களுக்குள்ள ஒரு விசேஷ குணம் அடிக்கடி வக்கிரித்துக் கொள்ளுவதுதான்.

வக்கிரம் என்ற வார்த்தையே நவக்கிரகங்களுக்காக ஏற்பட்டது!

அவ்விஷயத்தில் இதுவரை நவக்கிரகங்களுக்குப் போட்டி இருந்ததில்லை. ஆனால், இப்போது போட்டி ஏற்பட்டிருக்கிறது!

வக்கிரித்துக் கொள்ளுவது தங்களுடைய ஏகபோக பாத்தியமான குணம் என்று இனி நவக்கிரகங்கள் பெருமை யடித்துக்கொள்ள முடியாது.

அப்படிப் பெருமை யடித்துக் கொண்டால், 'ஜாக்கிரதை! நாங்கள் இதோ இருக்கிறோம்' என்று இந்தியாவிலுள்ள சில சமஸ்தானங்கள் நவக்கிரகங்களை எச்சரிக்கத் தயாரா யிருக்கின்றன!

ஆரம்பத்தில் பல சமஸ்தானங்கள் வக்கிரித்துக் கொண்டன. அவைகளின் வக்கிர குணம் பிறகு மறைந்துவிட்டது.

மைசூரும் தனது வக்கிரப் போக்கைச் சமீபத்தில் மாற்றிக் கொண்டு நேர்வழிக்கு வந்து ஜனப் பிரதிநிதிகளடங்கிய மந்திரி சபையையும் அமைத்ததற்காக அந்தச் சமஸ்தான மகாராஜாவையும் திவானையும் மனமார வாழ்த்துகிறோம்.

ஜுனாகாத்தின் வக்கிரம் தீராததால் அந்தச் சமஸ்தான நவாப், ராஜ்யத்தையே துறந்து ஓடும்படி நேர்ந்திருக்கிறது.

ஹைதராபாத்தின் வக்கிரமோ உச்சஸ்தானத்தை யடைந்து விட்டதால், அது தலை கீழாக நின்று வருகிறது!

அதன் வக்கிரப் போக்கைப் பற்றி நாளொரு சேதியும் பொழுதொரு மறுப்புமாக வந்த வண்ண மிருக்கின்றன.

ஹைதராபாத் சர்க்கார் பிரதிநிதிகளும் டில்லிக்குப் போவதும் வருவதுமாக இருந்து, இறுதியில் ஹைதராபாத்தையே விட்டுவிட்டுச் செல்லத் தீர்மானித்திருக்கின்றனர்!

பாகிஸ்தானில் சேருவதா அல்லது இந்தியாவுடன் சேருவதா என்பதைச் சமஸ்தான ஜனங்கள் முடிவு செய்ய வேண்டுமென்ற ஜனநாயக முறை அமுலுக்கு வந்திருக்குமாயின், தாமதத்துக்கோ, தகராறுகளுக்கோ இடமே ஏற்பட்டிராது.

எனினும், பிரிட்டிஷ் சர்க்கார் செய்யத் தவறிய அந்த நல்ல காரியத்தை இப்போது சமஸ்தானப் பிரஜைகளும், காலச் சக்கரத்தின் வேகத்தால் உந்தப்பட்டுப் பல சமஸ்தானாதிபதிகளும் செய்ய முற்பட்டிருக்கிறார்கள்.

* * *

இந்தியாவிலுள்ள பெரிய சமஸ்தானங்களில் ஒன்றான காஷ்மீரமும் ஜனநாயக முறையை ஒப்புக்கொண்டு விட்டது.

இந்தியாவுடன் சேருவதா அல்லது பாகிஸ்தானில் சேருவதா என்பது பற்றி முடிவு செய்யும் உரிமை ஜனங்களுக்கு உண்டென்பதை பல நாட்களுக்கு முந்தியே காஷ்மீர சமஸ்தான பிரதம மந்திரி அங்கீகரித்திருக்கிறார்.

அப்படி யிருந்தும், வட மேற்கு எல்லைப்புற வாசிகளான ஆப்ரிதியர்கள் திடீரென்று காஷ்மீரத்தின்மீது படையெடுத்து விட்டதால், காஷ்மீர சர்க்காருக்கு ஐக்கிய இந்தியாவில் சேர்ந்து இந்திய சர்க்காருடைய உதவியை நாடுவதைத் தவிர வேறு வழி யிராமற் போய் விட்டது.

அதே சமயம் காஷ்மீர மகாராஜா, மேற்படி சமஸ்தான ஜனங்களின் இணையற்ற தலைவரான ஷேக் அப்துல்லாவை, இடைக்கால மந்திரிசபை அமைக்கும்படியும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அதாவது காஷ்மீர மகாராஜா, தமது சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி முறையை அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருப்பதி லிருந்து, ஜனங்களின் அபிப்பிராயத்துக்கு விரோதமாக அவர் எதுவும் செய்ய விரும்பவில்லை யென்பது நன்கு தெரிகிறது.

இந்நிலைமையில், ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் காஷ்மீரத்தின் மீது படை யெடுத்திருப்பது மகா பாதகமான ஒரு செயலாகும்.

எல்லைப்புற வாசிகளில் சிலர் அறியாமையால் கொள்ளையிலும் கொலையிலும் ஈடுபடுவது இன்றோ நேற்றோ நிகழும் சம்பவங்களல்ல. சென்ற பல வருஷங்களாக நிகழ்ந்து வருவனவாகும்.

எனினும் பழைய சம்பவங்களுக்கும் இப்போதையப் படை யெடுப்புக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு.

இப்போது அவர்கள் பாகிஸ்தானிலிருந்தே காஷ்மீரத்துக்குள் பிரவேசித்திருக்கிறார்கள்.

நூற்றுக்கணக்கான ராணுவ லாரிகளுடனும், ஆயிரக்கணக்கான நவீன யுத்த தளவாடங்களுடனும் அவர்கள் பிரவேசித்து, மேற்படி சமஸ்தானத்தின் தலைநகருக்குச் சமீபத்திலும் வந்திருப்பதிலிருந்து பாகிஸ்தான் சர்க்காரால் தூண்டப்பட்டும், அவர்களின் உதவி பெற்றுமே வந்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இருக்க இடமில்லை.

சில தினங்களுக்கு முன் ஜனாப் ஜின்னா காஷ்மீர சர்க்காரைப் பிரமாதமாக மிரட்டியதி லிருந்து, மேற்படி உண்மை ஊர்ஜிதமாகிறது.

காயிதே ஆஜம் மூட்டிய நேரடி நடவடிக்கை நெருப்பையே அணைக்க முடியாமல் லட்சக்கணக்கான ஜனங்கள் சகிக்க முடியாத கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து வருகையில், பாகிஸ்தான் சர்க்கார் மறைமுகமாக ஒரு படை யெடுப்பையும் ஆரம்பித்திருப்பது ஜனங்களின் துர்ப்பாக்கியமே யாகும்.

காஷ்மீர மகாராஜா உதவி கோரியதற்கிணங்க, இந்திய சர்க்கார் துருப்புகளும் சென்றிருக்கின்றன.

எனவே, நியாயமின்றியும் காட்டுமிராண்டித் தனமாகவும் காஷ்மீரத்துக்குள் புகுந்துள்ள கூட்டத்தினரை, இந்தியத் துருப்புகள் விரட்டி யடித்து விடுவார்களென்பதில் சந்தேகமில்லை.

முஸ்லிம்களின் மதிப்புக்குப் பாத்திரரும், அஸ்ஸாம் கவர்னருமான ஸர் அக்பர் ஹைதரியும் காஷ்மீரத்துக்கு உதவி புரிவதாக வாக்களித்திருக்கிறார்.

காஷ்மீர சமஸ்தானத்தின்மீது அக்கிரமமாகப் படை யெடுத்திருப்போரை எதிர்க்கும் விஷயமாக அஸ்ஸாம் மாகாணம் சகல உதவியும் அளிக்கத் தயாரா யிருக்கிறது என்று அவர் கூறியிருப்பதே, மேற்படி படை யெடுப்பு முற்றிலும் அநீதியானதென்பதைக் காட்டப் போதுமானது.

வகுப்பு வெறி தலைக்கேறியவர்களை நிர்வாகிகளாகக் கொண்ட ஹைதராபாத் சமஸ்தானத்தின் பிரதம மந்திரி பதவியை சில மாதங்களுக்கு முன் ஸர் மிர்ஸா இஸ்மெயில் ராஜிநாமா செய்ததுகூட ஆச்சரியமில்லை.

ஆனால், முஸ்லிம் லீக் பக்தர்களில் ஒருவரான சத்தாரி நவாப்கூட ஹைதராபாத் பிரதம மந்திரி பதவியை ராஜிநாமா செய்ய வேண்டிய நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதி லிருந்து, நிஜாம் சர்க்காரின் ஆபத்தான போக்கை ஒருவாறு கற்பனை செய்து கொள்ளலாம்.

பிரிட்டிஷ் யுத்த தளவாடக் கம்பெனிகளிலிருந்து நிஜாம் சமஸ்தானத்துக்கு ஏராளமாக யுத்த தளவாடங்கள் வந்து கொண்டிருப்பதாக ஆதார பூர்வமான செய்தி யொன்று கூறுகிறது.

போதாக் குறைக்கு, சென்ற பல மாதங்களாக இந்திய சர்க்காருடன் சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு, ஓர் ஒப்பந்தத்துக்கும் வந்த பிரதம மந்திரி சத்தாரி நவாபும் மற்றும் இரண்டு நிபுணர்களும் அடங்கிய கமிட்டி ராஜிநாமா செய்யும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நிஜாம் சமஸ்தானத்திலுள்ள வகுப்பு வெறி பிடித்த பிற்போக்காளர்களடங்கிய ஒரு கூட்டத்தின் வற்புறுத்தலே, மேற்படி கமிட்டி ராஜிநாமா செய்ததற்கும், ஒப்பந்தம் வியர்த்தமானதற்கும் காரணமாகும்.

நிஜாம் மன்னருக்குச் சிறந்த யோசனை கூறக்கூடிய மந்திரிகள் இருப்பதால், அவ்விஷயமாக யாரும் துஷ்பிரசாரம் செய்ய வேண்டாமென்று சர்தார் பட்டேல் சில தினங்களுக்கு முன் எச்சரித்ததை யாரும் மறந்திருக்க முடியாது.

ஆனால், சிறந்த யோசனை சொல்லக்கூடிய மந்திரிகள் இப்போது ராஜிநாமா செய்ய நேர்ந்திருப்பதால், இனி வரும் சகுனிகளின் யோசனை ஹைதராபாத் சமஸ்தானத்தை எந்த நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்குமோ?

* * *

இவ்வாறாக, பாகிஸ்தான் தலைவர்களும் நிஜாம் மன்னர் போன்றவர்களும் அதிகார மமதையால் மதி மயங்கிக் காரியங்களைச் செய்து வருகையில். இந்தியாவிலுள்ள சில மாகாணங்களிலாவது முஸ்லிம் லீக் பிரமுகர்களின் மயக்கம் தெளிந்து வருவதை, நல்ல காலத்தின் அறிகுறி என்றே சொல்ல வேண்டும்.

சில விடங்களில் முஸ்லிம் லீக்கின் தூண்களாக இருந்து, பாகிஸ்தான்

ஏற்படக் காயிதே ஆஜமுக்குப் பேருதவி புரிந்தவர்கள்கூட இப்போது காங்கிரசில் சேர முன் வந்திருக்கிறார்கள்.

பாகிஸ்தான் ஏற்பட்ட பின் நிகழ்ந்துள்ள சம்பவங்கள், பல முஸ்லிம் லீக்கர்களையும் தங்களுடைய நிலைமையை ஆழ்ந்து சிந்திக்கும்படி செய்திருக்கின்றன.

ஐக்கிய மாகாணத்தில் முஸ்லிம் லீக்கின் திலகமாக விளங்கிய மஹ்முதாபாத் மகாராஜ் குமார்கூட, முஸ்லிம் லீக்கைக் கலைத்துவிட வேண்டுமென்றும், பாமரர்களான முஸ்லிம்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டு, செல்வந்தர்களான முஸ்லிம் லீக்கர்கள் பாகிஸ்தானுக்கு ஓடி விட்டார்களென்றும் கூறுகிறார்.

இந்தியாவிலுள்ள முஸ்லிம் லீக்கர்கள் யாவரும் ஆபத்தான வகுப்புவாதக் கொள்கையை விட்டு விட்டுக் காங்கிரசில் சேருவதுதான் புத்திசாலித்தனமென்று மௌலானா அபுல்கலாம் ஆஸாத் உள்பட பல பிரபல தேசிய முஸ்லிம்களும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

* * *

அவ்விஷயமாக இன்னும் மயக்கம் தெளியாதவர்கள் இந்தியாவிலுள்ள பிரபல முஸ்லிம் தலைவர்களில் ஒருவரான ஜனாப் ஸையது அலி ஸஹீரின் பொன்மொழிகளைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

"இந்தியாவிலுள்ள பத்துக் கோடி முஸ்லிம்களின் க்ஷேமத்துக்காகவே பாகிஸ்தான் கோருவதாக ஜனாப் ஜின்னா கூறி வந்தார்.

"ஆனால் இப்போதோ, இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் புதிய தலைவர்களை நாடி, தங்கள் க்ஷேமத்துக்கான புதிய முறையை வகுத்துக் கொள்ளும்படி கூறி, தம்முடைய பொறுப்பைக் கழித்துக் கொண்டிருக்கிறார்.

"பெரிதும் ஐக்கிய மாகாணம், பம்பாய், பீஹார் முதலிய மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களின் மகத்தான முயற்சியினாலேயே ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் பெற முடிந்தது.

"இந்தியா தனித் தனியான இரண்டு தேசங்கள்தான் என்ற பல்லவியை ஜின்னா இன்னும் விட்டபாடில்லை. மேற்படி பல்லவி இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான முஸ்லிம்களுக்கு எவ்வளவு ஆபத்தானது என்பதை அவர் இன்னும் உணர்ந்து கொள்ளாததே அதற்குக் காரணம்.

"எனவே, முஸ்லிம்கள் மற்றொரு தேசத்தைச் சேர்ந்தவர்களாதலால், அவர்கள் அவர்களுடைய சொந்த தேசமான பாகிஸ்தானுக்குப் போகட்டும் என்று ஹிந்துமகா சபையினர் போன்றவர்கள் கூறுவதை நியாயமற்றதென்று எவ்வாறு மறுக்க முடியும்?

"காந்திஜி, நேருஜி போன்ற உத்தமர்களின் தலைமையில், காங்கிரஸ் இத்தேசத்திலுள்ள யாவரும் ஒன்றே என்பதில் தளரா நம்பிக்கை கொண்டிருக்கிறது.

"ஆனால், ஜனாப் ஜின்னாவும் அவரது சீடர்களும் ஆத்திரமூட்டத்தக்க பிரசங்கங்களால், இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் நலனுக்கு நாசத்தை விளைவித்து வருகின்றனர்.

"உலகத்தின் முன்னிலையில் இந்தியாவின் கௌரவத்தைக் குலைப்பதில்தான் ஜின்னா கோஷ்டியினர் நாட்டங் கொண்டிருக்கிறார்களேயன்றி, முஸ்லிம்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கம் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை."


ஈரானில் இந்திய ஸ்தானீகராக நியமிக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் அறிஞரான ஸையது அலி ஸஹீரின் மேற்படி வார்த்தைகளைச் சகல முஸ்லிம்களும் ஆய்ந்தோய்ந்து பார்க்க வேண்டியது அவசரமான காரியமாகும்.

## நன்றி உரை

பாரதி மண்டபத் திறப்பு விழாவின்போது அரிய சேவை செய்தவர்களில் ஸெயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் பிரிகேடைச் சேர்ந்த ஜீயபுரம் ஆம்புலன்ஸ் டிவிஷனை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ஸ்ரீ டி. எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் மேற்படி சங்கப் படையினர், பெருங் கூட்டத்தில் காயமடைதல், மூர்ச்சையடைதல் முதலிய விபத்துகளுக்கு உள்ளானவர்களுக்குச் சிகிச்சை செய்யத் தயாராய்க் காத்திருந்தார்கள். இறைவன் அருளால் அந்த மாபெருங் கூட்டத்தில் ஒருவருக்கும் பெரிய காயம் அல்லது விபத்து நேரிடவில்லை. எனினும் மேற்படி சேவா சங்கத்தார் சேவை செய்யத் தயாராயிருந்த காரணத்தினால் வரவேற்புக் கமிட்டியார் இது விஷயமான கவலையின்றி வேறு காரியங்களைப் பார்க்க முடிந்தது.







# தாமரை மலர்ந்தது!

சென்ற வெள்ளிக்கிழமை விஜயதசமியன்று காலையில் சூரியன் உதித்ததும் தாமரை மலர்ந்தது. கலைத்தேவியின் கண்கள் மலர்ந்தன. தமிழ்த் தாயின் அகமும் முகமும் மலர்ந்தன.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் கவியரசர் பாரதியாரின் திருவாக்கின் மூலமாகத் தமிழ்த்தாய் வெளியிட்ட கோரிக்கையை நிறைவேற்றும் பணியை அன்று காலையில் தமிழ்த் தொண்டர்கள் சிலர் மேற்கொண்டார்கள். அந்தத் திருப்பணியின் ஆரம்ப விழாவைக் கொண்டாடினார்கள். சென்னைக் கடற்கரையை அடுத்துள்ள சர்வ கலாசாலைக் கட்டிடத்தில் மேற்படி ஆரம்பவிழா நடைபெற்றது.

சர்வ கலாசாலைக் கட்டிடத்தின் அழகிய விசாலமான அறை ஒன்றில் ஒரு சிறு மேஜையில் திருக்குறள், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் ஆகிய தமிழ் நூல்களின் ஓலைச் சுவடிகளும் அச்சுப் புத்தகங்களும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஓலைச் சுவடிகளையும் அச்சுப் புத்தகங்களையும் தாமரை மலர்களும் மற்றும் பலவகைப் பூக்களும் அலங்கரித்தன. இரு பக்கத்திலும் ஐந்து முகக் குத்து விளக்குகள் ஒளியுடன் திகழ்ந்தன.

தமிழன்பர்களும் அறிவு வளர்ச்சியில் ஆர்வங் கொண்டவர்களுமாகச் சுமார் ஐம்பது அறுபது பேர் கலைத் தெய்வத்தின் சந்நிதியில் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் சிலர்:—வைஸ் சான்ஸலர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார், ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம், ஸ்ரீ கோபால ரெட்டி, ஸ்ரீ காளா வெங்கட்ராவ், ஸ்ரீ மாதவமேனன், "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீனிவாசன், "தினமணி" ஆசிரியர் ஸ்ரீ ஏ. என். சிவராமன், ட்ரோஜன் ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார், "கலைமகள்" ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன், ஸ்ரீ என். ராமரத்தினம், சர்வ கலாசாலைத் தமிழ் ஆராய்ச்சித் தலைவர் ஸ்ரீ ஆர். பி. சேதுப் பிள்ளை, ஸ்ரீ பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை, "சக்தி" ஆசிரியர் ஸ்ரீ வை. கோவிந்தன், குண்டூர் ஸ்ரீ நரசிம்மராவ், ஸ்ரீ சத்தியநாராயண முதலியோர் ஆவர்.



"சகல கலாவாணியே" "வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்" என்னும் கலைமகள் தோத்திர கீதங்கள் பாடப்பட்ட பிறகு, வைஸ் சான்ஸலர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் அக்கிராசன பீடத்தில் அமர்ந்தார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் காரியதரிசி, கழகம் இதுவரை செய்திருக்கும் காரியங்களைப் பற்றிக் கூறினார்.

கல்வி மந்திரி கனம் ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் அன்று ஆரம்பமாகும் திருப்பணியைப் பற்றித் தெரிவித்தார். ஆகஸ்டு 15உ சுதந்திர தினத்தன்று, "கலைக் களஞ்சியம்" தயாரிப்பதற்காக நன்கொடைகளைக் கோரித் தாம் விண்ணப்பம் விடுத்தது பற்றியும், தமிழ்மக்கள் தாராளமாக மனமுவந்து நிதி வழங்கியது பற்றியும் குதூகலமாக எடுத்துக் கூறினார். விஜயதசமியாகிய புனித தினத்தில் "கலைக் களஞ்சிய" வேலையை ஆரம்பித்து வைக்கப் போகிறோமென்றும், "கலைக் களஞ்சிய"த்தின் உதவி ஆசிரியாகப் பழம் பெரும் தேச பக்தரும் பல ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியருமான ஸ்ரீ பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை நியமிக்கப்பட்டிருக்கிறாரென்றும் கூறிய போது, சபையோர் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தத் திருப்பணியில் சர்வ கலாசாலையார் ஒத்துழைக்க முன் வந்தது பற்றிக் கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் தமது மகிழ்ச்சியை வெளியிட்டு, தெலுங்கு பாஷையிலும் "கலைக் களஞ்சியம்" வெளியிடப் படுமென்றும், அதற்காக நிதி மந்திரி ஸ்ரீ பி. கோபால ரெட்டியின் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தார்.

டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் முதன் முதலாகத் தமிழில் சில வார்த்தைகள் கூறிவிட்டுப் பிறகு ஆங்கிலத்தில் சர்வகலாசாலையின் சார்பாகச் சர்வ உதவிகளும் அளிப்பதாக வாக்களித்தார்.

இதன் பிறகு, அன்றையத் திருவிழாவின் முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அதாவது ஸ்ரீ பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை "கலைக் களஞ்சிய"த் திருப்பணியை ஆரம்பித்து வைத்தார். "தமிழ்த்தாய் துணை" என்று எழுதி, தெய்வத் திருக்குறளின் ஆரம்ப வரிகளான,


> "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு"

என்னும் வரிகளையும் எழுதினார். இவ்விதமாகக் "கலைக் களஞ்சிய"த் திருப்பணி ஆரம்பமானபோது, சபையில் இருந்தவர்கள் மலர்மாரி பொழிந்து வாழ்த்துக் கூறி மகிழ்ந்தார்கள்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொக்கிஷதார் ட்ரோஜன் ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார் வந்தனோபசாரம் சொல்லியதும் சபை முடிவுற்றது.

* * *

"கலைக் களஞ்சிய"த் தொண்டின் முக்கியத்தைப் பற்றி முன்னர் இருமுறை



எழுதி யிருக்கிறோம். "என்ஸைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா" இல்லாத ஆங்கிலப் புத்தகசாலை எதையும் காண முடியாது. ஆங்கில நாட்டில் கல்வி யறிவு படைத்தவர்கள் என்று கருதப்படும் ஒவ்வொருவர் வீட்டிலும் மேற்படி புத்தகம் இல்லாமலிராது. "என்ஸைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா" என்னும் தாய் நூலைத் தவிர இன்னும் எத்தனையோ "என்ஸைக்ளோ பீடியா"க்கள் சிறிதாகவும் பெரிதாகவும் ஆங்கில நாட்டில் வெளியாகி யிருக்கின்றன; அமெரிக்காவிலும் வெளியாகி யிருக்கின்றன.

இத்தகைய "கலைக் களஞ்சிய" நூல் தமிழிலும் வேண்டுமென்று பல காலமாகத் தமிழ் அன்பர்கள் பலர் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால் இதுகாறும் அதற்காகப் பெரு முயற்சி எதுவும் செய்யப்படவில்லை.

நாளது 1947-ம் வருஷத்தில் (தமிழ் சர்வசித்தி வருஷத்தில்) பல அற்புதங்கள் இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் நடந்திருக்கின்றன.

தமிழ் நாட்டில் நடந்திருக்கும் அற்புதங்களில் கலைக் களஞ்சியத்துக்கு நிதி வசூலான அற்புதத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

ஆகஸ்டு 15௳ சுதந்திர தினத்தன்று நமது கல்வி மந்திரி "கலைக் களஞ்சிய"த்துக்கு நிதி வேண்டும் என்று விண்ணப்பம் வெளியிட்டார். ஒரு லட்சம் ரூபாய் நிதி சேர்ந்ததும் "கலைக் களஞ்சிய" வேலை தொடங்குவது என்றும் தீர்மானித்திருந்தார்.

விண்ணப்பம் வெளியிட்டுச் சரியாக ஒரு மாதத்திற்குள்ளாக ஒரு லட்சம் ரூபாய் வசூலாகி விட்டது!

இவ்வளவு விரைவாக இவ்வளவு பெரிய நிதி ஒன்று வசூலானது தமிழ் நாட்டிற்கு ஓர் அதிசயம் என்றே சொல்லவேண்டும். தமிழ் வளர்ச்சியில் தமிழ் மக்களுக்கு எவ்வளவு ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த அறிகுறியாகும்.

ஆனால் தமிழ்மக்களின் தமிழ் ஆர்வத்தின் அறிகுறி இத்துடன் நின்று விடக் கூடாது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

ஒரு லட்சம் ரூபாய் வசூலானதும் "கலைக் களஞ்சிய" வேலையை ஆரம்பித்து விடுவதாகக் கல்வி மந்திரி கூறினாரே தவிர, ஒரு லட்சம் ரூபாயில் காரியம் முடிந்து விடும் என்று சொல்லவில்லை.

"தமிழ்க் கலைக் களஞ்சியம்" ஒவ்வொன்றும் 600 பக்கங்களுக்கு மேல் கொண்ட பத்து புத்தகங்களாக வெளியாகும்.

இந்தத் திருப்பணிக்கு பல வருஷ காலம் நூற்றுக் கணக்கான அறிஞர்கள் வேலை செய்தாக வேண்டும். மொத்தச் செலவு பல லட்சம் ரூபாய் ஆகும். சுமார் பன்னிரண்டு லட்சம் ரூபாய் ஆகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சர்வகலாசாலையாரும் சர்க்காரும் இந்தப் பெரும் பணிக்குத் தாராளமாகப் பொருள் உதவிசெய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆயினும் தமிழ் மக்களிடமிருந்து சுமார் மூன்று லட்சம் ரூபாய் நன்கொடை சேர்ந்தாக வேண்டும்.

இன்று வரை ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபாய் சேர்ந்திருக்கிறது.

பாக்கித் தொகையையும் தமிழ்மக்கள் மனமுவந்து கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் மட்டுமன்றி, வடநாட்டிலும் பர்மாவிலும் மலாயாவிலும் உள்ள தமிழன்பர்களும் தங்களுடைய கைங்கரியத்தைச் செய்ய வேண்டும்.

தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் சார்பாக இலங்கைக்குச் சில பிரதிநிதிகளை நிதி திரட்ட அனுப்பலாமென்று ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அரும்பெரும் தமிழ்ப் பணியில் ஊக்கமுடைய இலங்கையில் வாழும் தமிழன்பர்கள், கலைக் களஞ்சியப் பொக்கிஷதாருக்கு எழுதக் கோருகிறோம்.

விலாசம் :—ட்ரோஜன் ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார், எவர்கிரீன், 45, தியாகராய ரோடு, தியாகராஜ நகர், சென்னை.

## நன்றி

பாளையங்கோட்டை இந்தியப் பெண்கள் சேவைச் சங்கத்தின் தலைவர் ஸ்ரீமதி ஏ. மாணிக்கம் பி. ஏ., அவர்களின் தலைமையில் ஸ்ரீமதி கணேச முதலியார், ஸ்ரீமதி சுப்பம்மாள், ஸ்ரீமதி பார்வதி அம்மாள், ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி, ஸ்ரீமதி ராஜம்மாள், ஸ்ரீமதி குலோரி டானியல் ஆகியவர்கள் எட்டயபுரம் பாரதி மண்டபத் திருவிழாவில் அரும் பணிகள் செய்தார்கள். அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

# படிக்கப் பார்!

## அஜந்தா—புத்தகத் தொடர்

சங்கீதத்துக்குக் கர்நாடக சங்கீதமும் சிற்பத்துக்குத் தமிழ் நாட்டுக் கோயில்களும் எப்படிச் சிகரமாக விளங்குகின்றனவோ அவ்விதமே சித்திரக் கலைக்கு இணையில்லாத எவரஸ்ட் சிகரமாக விளங்குவன அஜந்தா சித்திரங்கள். அஜந்தாவுக்கு ஒரு தடவை சென்று வந்தவர்களும் சரி, அஜந்தாவைப் பற்றி நன்ருய்ப் படித்துத் தெரிந்து கொண்டவர்களும் சரி, "அஜந்தா" என்னும் சொல்லைக் கேட்டதுமே இந்த உலகத்தை மறந்து அற்புதக் கனவு லோகத்துக்குச் சென்று விடுவார்கள். அத்தகைய "அஜந்தா" என்னும் பெயரைத் தெரிந்தெடுத்த ஆசிரியர் தலைசிறந்த கலை ரசிகராயிருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டியதில்லை.

"அஜந்தா"வின் முதல் இரண்டு புத்தகங்கள் இதுவரை வெளியாகி யிருக்கின்றன. இரண்டும் இரண்டு கலைப் பொக்கிஷங்கள். படிக்கப் படிக்க இனிக்கும் கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும், இலக்கிய ஆராய்ச்சிகளும் நிரம்பியவை.

பாண மகாகவியின் கலையுள்ளம் ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியின் பிரதாபத்தைப் பாடுவதை விட்டு, "காதம்பரி" என்னும் காவிய எழிலரசியை உபாசிக்கத் தொடங்கிய விஷயத்தை அழகிய கற்பனைச் சித்திரமாக வரைந்திருக்கிறார் கரிச்சான் குஞ்சு.

"சந்திரிகை" என்னும் வசன கவிதை உண்மையான கவி உள்ளத்திலிருந்து பிறந்திருக்க வேண்டும்.

கேள்வி :—

நீ உலாவிடும் நீல வெளியிலே
கார் உலாவுவதேன் ? மின்னல்
வீசிடும் மோகன வெளியிலே
இன்னல் காண்பதும் என் ?
சந்திரிகையே ! சந்திரிகையே !

பதில் :—

சோலை கண்டால் அங்கு
மலர்கள் உண்டு — அதில்
மணமும் உண்டு — கடும்
முள்ளும் உண்டு

படிப்பதற்கு எவ்வளவு இனிமையாயிருக்கிறது? அதோடு விஷயத்தின் கருத்தும் மனதைக் கவர்கிறதல்லவா?

"பெருமழை" என்ற கதையில் வெள்ளத்தின் வர்ணனை ஒன்று வருகிறது :

"எதிரில் பள்ளத்தாக்கு முழுவதும் மழைநீர் ஏரிபோல் தோன்றிற்று. சிறிது தூரத்திலுள்ள மரக் கிளைகள் அடி மறைந்து வானத்தினின்று தொங்குவன போலக் காணப்பட்டன."

இந்த ஒரு வாக்கியத்தின் மூலமாகப் பெரு வெள்ளத்தை நம் மனக்கண் முன்னால் கதை ஆசிரியர் கொண்டுவந்து விடுகிறார் அல்லவா?

"அஜந்தா" ஆசிரியர் "கே. ஸ்ரீ." என்ற இரண்டு எழுத்துக்களில் மறைந்திருக்கிறார். இவருடைய முழுப் பெயர் "கிருஷ்ண ஸ்ரீனிவாஸ்" என்று தெரிந்து கொண்டேன். "அஜந்தா"வைப் படித்த பிறகு இந்த நூலாசிரியரின் "The Dance of Dust" என்னும் ஆங்கிலக் கவிதைப் புத்தகத்தையும், "ரேஷன் காலம்", "மனோரதம்" என்னும் தமிழ்ப் புத்தகங்களையும் வாங்கிப் படித்தேன். நேயர்களையும் வாங்கிப் படிக்கும்படி சிபார்சு செய்கிறேன்.

அடுத்த "அஜந்தா" இதழ் கண்களைப் பறிக்கும் மூவர்ணப் படங்களுடன் இருநூறு பக்கங்கொண்ட தீபாவளி மலராகத் திகழும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. விலை ரூபாய் ஒன்றுதான். விலாசம் : 188, ராயப்பேட்டை ஹைரோட், சென்னை 14.

## பாரிஜாதம்—பூஜா மலர்

கதைகளிலும் காவியங்களிலும் கீர்த்தி பெற்ற பாரிஜாதம் பூவுலகத்துப் புஷ்பங்களிலே உயர்ந்த ஸ்தானம் வகிப்பது; தேவலோகத்திலேகூட பாரிஜாதத்துக்குத் தனி மதிப்பு உண்டு என்று பாகவத புராணத்திலிருந்து அறிகிறோம். கண்ணனுடைய தேவிமார்களிடையே கலகத்துக்குக் காரணமாயிருந்த மலரல்லவா பாரிஜாதம்?

அத்தகைய சுகந்த புஷ்பத்தின் பெயரைத் தாங்கிக்கொண்டு "பாரிஜாதம்" என்னும் சித்திர மாதப் பத்திரிகை சில காலமாக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர் 'வஸந்தன்.'

விஜயதசமி யன்று வெளியான "பாரிஜாத"த்தின் பூஜா மலர் அழகும் மணமும் பொருந்திச் சிறந்து விளங்குகிறது. அட்டைப் படத்தின் வனப்பு அபாரம். உள்ளே மற்றும் இரண்டு மூவர்ண சித்திரங்கள் ஓவியக் கலையின் மேன்மைக்கு உதாரணங்களாகப் பொலிகின்றன. புத்தகத்தில் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் ஏதாவது ஒரு சித்திரம் கவனத்தைக் கவர்கிறது.

ஸரஸ்வதி பூஜையை யொட்டி வெளியான மலரானதால், கல்வி சம்பந்தமான விஷயங்கள் பிராதான்யம் பெற்றிருக்கின்றன.

ரஸிகமணி டி. கே. சி. அவர்களைப் பேட்டி கண்டு தற்காலக் கல்வி முறையின் சீர்கேட்டைப் பற்றி ரஸிகமணியின் கொள்கைகளை "வஸந்தன்" வெளியிட்டிருக்கிறார்.

சுதந்திரத்தை நிலைநிறுத்தச் சுகாதாரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது பற்றி சுகாதாரக் கலை நிபுணர் ஸ்ரீ எ. வி. ராமன் அரிய கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார்.

கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்கள் ஒரு கட்டுரை உதவி யிருக்கிறார். கல்கத்தா தமிழர்களின் ரஸிகத் தன்மையையும் தமிழ்ப் பற்றையும் குறித்துக் "கல்கி" ஆசிரியர் ஒரு கட்டுரையில் விவரித்திருக்கிறார்.

சுவை பொருந்திய பத்துச் சிறு கதைகளும், பல ரஸமான துணுக்குகளும் இந்தப் பூஜா மலரை அலங்கரிக்கின்றன.

ஒரு ரூபாய் கொடுத்து 160 பக்கமுள்ள "பாரிஜாத"ப் பூஜா மலரை வாங்கியவர்கள் லாபகரமான ஒரு பேரம் செய்ததாகவே எண்ணுவார்கள்.

விலாசம் :—மானேஜர், "பாரிஜாதம்", சுபத்திரா மான்ஷன், மௌண்ட் ரோட், சென்னை.

# கம்பர் தரும் காட்சி

## 192. உன் துன்பம் என்னதே!

டி. கே. சி.

சுக்ரீவனை ராமன் உட்காரச் சொன்னான். ஆம், உட்கார்ந்தான். ஆனால் பேச வாய் எழவில்லை. அத்தனை உள்ளக் களிப்பு! சிறிது நேரம் கழித்துச் சமயம் பார்த்துப் பேச ஆரம்பிக்கிறான்.

பாவமெல்லாம் தொலையும்படி நோன்பு நோற்றவர் என்னைப் போல் யார் இருக்கிறார்கள்? சகல செல்வத்துக்கும் உரிய சக்கரவர்த்தித் திருமகன் அல்லவா நீ! அத்தகைய உன்னை, உலகுக்கே நாயகமாகிய உன்னை, அடைந்து விட்டேனே நான்!

ஆயதோர் அவதியின் கண்,
அருக்கன்சேய் அரசைநோக் கித்,

'தீவினை தீயநோற் றார்
என்னின்யார்; செல்வ! நின்னை,—

நாயகம் உலகுக்கெல் லாம்
என்னலாம் நலமிக்கோ யை,—

மேயினன்! விதியேநல் கின்
மேவல்ஆ காதென்?' என் றான்.

[ஆயதோர் அவதியின்கண்: நல்ல சமயத்தில்; அருக்கன் சேய் அரசை நோக்கி: சூரிய புத்திரனான சுக்ரீவன் ராமனைப் பார்த்து; தீவினை தீயநோற்றார்: பூர்வத்தில் செய்த தீவினை எல்லாம் மிச்சமே இல்லாமல் போகும்படி தவம் இயற்றியவர்; என்னின் யார்: என்னைப் போல் யார் இருக்கிறார்கள்; செல்வ நின்னை: செல்வனே உன்னை; நலம் மிக்கோயை: சகல சம்பத்தும் உடைய உன்னை; மேயினன்: அடைந்து விட்டேன்; விதியே நல்கின் மேவல் ஆகாது என்: விதியே ஒன்றைக் கொடுக்கிறது என்று ஏற்பட்டு விட்டால் அடையக் கூடாத காரியம் ஒன்று இருக்கவா செய்கிறது?]

ராமனிடத்தில் இந்த விதமாகத் தன்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்து விட்டு, அடுத்தாற்போலத் தன் அனுதாபத்தை மிக்க பரிவோடு சொல்லுகிறான். அதன் பிறகு தன்னுடைய சொந்தக் கஷ்டத்தை வெளியிடுகிறான்.

"என்னுடைய தமையன் ஒருவன் இருக்கிறான். அவனுடைய அதிகாரத்தையும் பலத்தையும் கொண்டு, என்னை எப்படியெல்லாமோ துன்புறுத்தி இருள் மூடிய பாதாள லோகம்தான் புகலிடம் என்று எண்ணும்படியாக எங்கெங்கெல்லாமோ தொடர்ந்து துரத்தினான். கடைசியில் இந்த மலை எனக்கு அரணாக வாய்ந்தது. எப்படியோ பிழைத்தேன். ஒவ்வொரு நிமிஷமும் என் உயிருக்கு ஆபத்துத்தான்!"

'மூரனுடைத் தடக்கைஓச் சி
முன்னவன், பின்வந்தே னை

இருள்நிலைப் புறத்தின்கா றும்
உலகெங்கும் தொடர, இக்குன்(று)

அரணுடைத் தாகிஉய்ந் தேன்,
ஆருயிர் புரக்கலாற் றேன்

சரண்உனைப் புகுந்தேன்என் னைத்
தாங்குதல் தருமம்' என் றான்.

[மூரனுடைத் தடக்கை ஓச்சி: மிக்க வலிமை கொண்ட பெரிய கையை ஓங்கி, அதாவது அதிகாரத்தை எல்லாம் செலுத்தி; முன்னவன் பின்வந்தேனை: அண்ணனாகிய வாலி தம்பியாகிய என்னை; இருள்நிலைப் புறத்தின் காறும்: சதா இருள் குடியிருக்கின்ற பாதாளம் வரைக்கும்; உலகு எங்கும் தொடர: உலகத்தில் போன போன இடம் எல்லாம் தொடர; இக்குன்று அரணுடைத்தாகி உய்ந்தேன்: கடைசியில் இந்த மலையைக் கோட்டையாக வைத்துக் கொண்டு எப்படியோ தப்பினேன்; ஆருயிர் புரக்கல் ஆற்றேன்: ஒவ்வொரு நிமிஷமும் என் உயிருக்கு ஆபத்துத்தான். இனி எப்படித் தப்புவது என்பது தெரியவில்லை; சரண் உனைப் புகுந்தேன்: உன்னுடைய பாதமே எனக்குப் புகலிடம்; என்னைத் தாங்குதல் தருமம்: என்னைக் காப்பாற்றுவது பெரிய தருமம்.



குறிப்பு:—எவ்வளவோ கஷ்டப் படுத்தலாம் அதிகாரம் ஒருவன் கையில் இருக்கும்போது. கஷ்டத்துக்கு உள்ளானவன் சுக்ரீவனைப் போலத்தான் பேசுவான். பாதாளம் வரைக்குமே துரத்தித் துரத்தி அடித்தான் என்றெல்லாம் கஷ்டத்தை எடுத்துச் சொல்லத் தோன்றும். கஷ்டத்தை அப்படித்தான் அளக்க வேண்டும்.]

***

"சரணடைந்தேன்!" என்று சுக்ரீவன் சொன்ன வார்த்தை ராமனை உருக்கி விட்டது. இதயம் உருகினவனாய்ச் சொல்லுகிறான் ராமன்.

"யாருக்கும் துன்பங்கள் உண்டு. உனக்கும் உண்டு. இதுவரை அனுபவித்தது போகட்டும். இனிமேல் உண்டாகும் துன்பங்கள் எல்லாம் (தீர்ந்து போகாது மிஞ்சி நிற்பன) எனக்கும் உனக்கும் ஒத்தவையே" என்று சொல்லுகிறான்.

என்றஅக் குரக்குவேந் தை
இராமனும் இரங்கிநோக் கி

'உன்றனக் குரியஎன் று
துன்பங்கள் உள்ளமுன் னுள்

சென்றன போகமேல் வந்(து)
உறுவன,— தீர்தலின் றி

நின்றன,— எனக்கும்நிற் கும்
நேர்' என மொழியும்நே ரா.

[என்ற அக்குரக்கு வேந்தை: என்று பேசிய குரங்குகளுக்கு அரசனான சுக்ரீவனை; துன்பங்கள் உள்ள: ஏற்பட்டுள்ள துன்பங்கள்; முன்னுள் சென்றன போக: முன்னமே கழிந்து போன துன்பங்கள் போக; மேல் வந்து உறுவன: இனிமேல் உண்டாகும் துன்பங்கள்; தீர்தலின்றி நின்றன: நம் இருவராலும் தீர்க்க முடியாதபடி மிஞ்சியுள்ள துன்பங்கள்; எனக்கும் நிற்கும் நேர்: எனக்கும் உனக்கும் ஒத்தவைகளே, அவைகள் விஷயமாக நமக்குள் வித்தியாசம் இல்லை; மொழியும் நேரா: நேர்ந்து, அதாவது இதயம் ஒத்து மொழியும்.]


துன்பப்பட்ட ஆன்மா என்று தெரிந்த மாத்திரத்தில் சுக்ரீவன் மேல் ராமனுக்கு அப்படியே இரக்கம் உண்டாய் விட்டது. ராமன் என்றால் இரக்கத்தை ஒழிக்க இயலாதவன் என்று சொல்ல வேண்டும்.


**K. S. E.**

நம் சுதந்திர தீபாவளிக்காக நவீன பார்டர்களில் ஏராளமாக கொள்ளே காலம் பட்டுப் புடவைகள் வந்து குவிந்துள்ளன. இன்றே விஜயம் செய்யுங்கள்.

**காத்தாயி ஸில்க் எம்போரியம்**

கீழமாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்






# வசுமதியின் தியாகம்

சூடாலை

"இது என்ன அக்கிரமம்! தந்தப் பதுமையைப் போலிருக்கும் இந்தப் பெண் வசுமதியை இப்படிப்பட்ட கிழத்திற்குக் கொடுத்ததைவிடப் பேசாமல் ஆற்றிலோ, குளத்திலோ தள்ளிவிட்டிருக்கலாமே!"

"இந்தக் கிழத்தைக் கட்டிக் கொண்டது மல்லாமல், இப்படி மனம் பொறுத்துப் பணிவிடை வேறு செய்கிறாளே, இவள்!"

என்னைக் கண்டதும் இப்படி யெல்லாம் எத்தனையோ பேர் பேசிக் கொள்கிறார்கள். என்னுடைய நிலைமையை அறிந்தால் அவர்கள் இப்படி யெல்லாம் பேசிக் கொள்வார்களா?

என் தந்தை ஒரு கடையில் குமாஸ்தா உத்தியோகம் பார்த்து வந்தார். அதில் கிடைத்த இருபத்தைந்து ரூபாய் மாதச் சம்பளத்தில் ஏழு குழந்தைகளும், பெற்றோரும் ஜீவிக்க வேண்டும். என் தாயாருக்குக் கொஞ்சம் பிறந்த வீட்டாரின் தயவு இருந்ததால் எப்படியோ குடும்பத்தை ஒருவிதமாய் நிர்வகித்து வந்தாள்.

இதில் மூத்தவளாகப் பிறந்த எனக்குத் தான் குடும்ப நிலையும் பெற்றோரின் கஷ்டமும் அதிகமாய்த் தெரிந்திருந்தது. எனக்கு அடுத்தவர்களான லக்ஷ்மி, பூரணி இவர்களின் மனப்போக்கு எப்பொழுதும் தனியாகத்தான் இருக்கும். அவர்களுக்குத் தங்கள் நிலைமைக்குத் தகுந்தபடி ஆசைகளை அடக்கி வைத்துக் கொள்ள வேண்டுமென்று தெரியாது. மற்றவர்களைப் பார்த்துப் பார்த்து நாமும் அவர்களைப் போல் இருக்க முடியவில்லையே என்று ஏக்கமடைவார்கள்.

குடும்பக் கவலையால் மனம் நொந்து போயிருந்த அம்மாவால் குழந்தைகளிடம் அன்பாகப் பேசக்கூட முடியாது. அவர்களிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்த என்னிடம்தான் எனக்கு இளையவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்வார்கள். ஏழ்மை நிலையிலிருந்தாலும், வருங்காலத்தை உத்தேசித்து அப்பா எங்கள் படிப்பையும் கவனித்து வந்தார். கடை முதலாளியின் சிபார்சைக் கொண்டு எங்களை இலவசமாகப் பள்ளியில் சேர்க்க முடிந்ததால், நாங்கள் கொஞ்சம் கல்வியறிவு பெற முடிந்தது.

நாட்கள் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தன. குடும்ப சௌகரியத்தை உத்தேசித்து நான் அந்த வருஷத்தோடு என் படிப்பை நிறுத்திக்கொண்டு விடலாமென்று தீர்மானித்து விட்டேன். எனக்கு விவரம் தெரிந்த நாள் முதற்கொண்டு, என்னால் பெற்றோருக்கு எவ்விதமான தொந்தரவும் இருக்கக் கூடாதென்ற எண்ணம் என் மனதில் வேரூன்றி விட்டது. ஆதலால், என் சிநேகிதி விசாலாட்சியின் யோசனைப்படி நான் இன்னும் சில மாதங்களில் உபாத்தினி வேலையை ஏற்றுக்கொண்டு, அதன் மூலம் பெற்றோருக்குச் சற்று ஆறுதல் அளிக்கலாம் என்று எண்ணியிருந்தேன்.

ஆனால், அம்மாவுக்கு நான் விவாகம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாக இருக்க வேண்டுமென்பதில்தான் ஆசை. ஏதோ இரண்டு எழுத்து படித்திருக்கிறேன் என்ற காரணத்தால், எந்த வாலிபனேனும் வரதட்சணையின்றி என்னை மணந்து கொண்டு போய்விடுவான் என்பது அவள் எண்ணம்.

என் தங்கை லக்ஷ்மி அம்மாவின் இந்த எண்ணத்தைத்தான் அனுசரித்தாள். தான் படித்துத் தேறிவிட்டால் தன் இஷ்டப்படி தன்னுடைய மனதுக்குகந்த ஒருவனை மணம் செய்து கொண்டு விடலாம் என்பது அவள் எண்ணம். அதனால்தான் அவள் பிறருடைய அனுமதி யின்றி ராஜுவைத் தன் மனதில் வரித்துக் கொண்டு விட்டாள்.

ராஜு சுசீலாவின் சகோதரன். அவளும் லக்ஷ்மியும் நெடு நாட்களாகவே வெகு அன்னியோன்யமாகப் பழகி வந்தார்கள். லக்ஷ்மியின் ஆசை நிறைந்த உள்ளத்துக்குச் சுசீலாவின் நேசம் ஆறுதலையளித்தது. அடிக்கடி சுசீலாவின் வீட்டுக்குப் போய் அவள் வீட்டாரோடு பழகுவதிலும், அங்கிருந்து பத்திரிகைகள் புத்தகங்கள் முதலியவற்றை இரவல் வாங்கிப் படிப்பதிலும் தன்னை மறந்து விடுவாள்.

செல்வச் செருக்கற்ற சுசீலாவைப் போலவே அவள் சகோதரன் ராஜுவும் மிக்க நல்லவன். அடிக்கடி தன் தங்கையுடன் வரும் லக்ஷ்மியின் அழகையும், கல்வியறிவையும் கண்டு அவளிடம் நாளடைவில் அன்பு கொண்டு விட்டான். ராஜுவின் இனிய குணமும் கபடமற்ற பேச்சும் லக்ஷ்மியின் மனதைக் கவர்ந்து விட்டது.

லக்ஷ்மியின் மன நிலையை நான் அறிந்து கொண்டதும் எனக்குக் கவலை அதிகரித்தது. "அடி, அப்பாவிப் பெண்ணே! உலகத்தை அறியக்கூடிய வயது வந்தும் இன்னும் நீ சிறு குழந்தையைப் போலவே இருக்கிறாயே! இது தகுமா?" என்று நான் அவளுக்குப் 'புத்தி' சொன்னேன். அதற்காக அவள் வெகுவாய் என்னுடன் விவாதிக்க ஆரம்பித்து விட்டாள். அதற்குக் காரணம் பத்திரிகைகளில் அடிக்கடி வெளியாகும் சில சீர்திருத்தக் கதைகளை அவள் படித்திருந்ததுதான். ஜனங்கள் அந்தக் கதைகளை விழுந்து விழுந்து படிப்பதைப் போலவே நடக்கவும் ஆரம்பித்து விடுவார்கள் என்பது அவளுடைய அசட்டு நம்பிக்கை.



அதிகமாய்ச் சொன்னால் லக்ஷ்மியின் மனது முறிந்து விடுமென்று நான் அத்துடன் நிறுத்திக் கொண்டேன்.

சிறு வயது முதற்கொண்டு, இப்படி நிறைவேறாத ஆசைகளினால் வேதனைப்படும் லக்ஷ்மியை நினைத்தபொழுது எனக்குப் பரிதாபமாக இருந்தது.

★

அன்று வெள்ளிக்கிழமை. காலை முதல் தேக சுக மில்லாது படுத்திருந்தார் அப்பா. நான் கவலையோடு அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது கோயிலுக்குப் போய்விட்டு வந்த அம்மா, "அடுத்த தெரு சங்கரய்யர் மூன்றாம் தாரமாய் மணம் செய்து கொள்ளப் பெண் பார்க்கிறாராம்! கோயிலுக்கு வந்திருந்த குப்புச் சித்தி இந்த விஷயத்தை என்னிடம் சொன்னாள்" என்றாள்.

"பணமிருந்தால் மனிதன் தன் வயதைக்கூட எண்ணிப் பார்ப்பதில்லை. இந்த வயதில் அவரை விவாகம் செய்துகொள்ள எந்தப் பெண் முன் வருவாள்?" என்றார் அப்பா.

"என்னவோ பாவம்! குழந்தை குட்டி ஒன்றும் இல்லை. சொத்தோ லக்ஷ லக்ஷமாய்க் கிடக்கிறது. அவருக்கு ஆசை யிருக்காதா!" என்றாள் அம்மா.

"அப்படியானால் நீகூட உன் பெண்களில் ஒருத்தியை அவருக்குக் கொடுத்து விடுவாய்போலிருக்கே!" என்று அம்மாவைப் பரிகசித்தார் அப்பா.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் என் மனம் தீவிரமாய்ச் சிந்திக்கத் தொடங்கியது. என்னுடன் பிறந்திருந்த ஒவ்வொருவரையும் பற்றி நான் அப்பொழுது நினைத்துப் பார்த்தேன்.

நான் ஏதோ உத்தியோகம் பார்க்கப் போகிறேன் என்று அறிந்தவுடன் குழந்தை கமலா, "உனக்குப் பணம் வந்தால் எனக்குப் பட்டுப் பாவாடை வாங்கித் தருவாயா, அக்கா!" என்று கேட்டு விட்டாள்.

நீலுவுக்குத் தன் கைக்குப் பொன் வளையல் இல்லையே என்று ஏக்கம்!

ரகுவும் ஸரஸுவும் அவ்வளவாகத் தங்கள் மனக்குறையை வெளியிட மாட்டார்கள்.

இவர்களுக் கெல்லாம் மேலாக, அந்தப் பணக்கார வீட்டுப் பிள்ளையான ராஜுவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் லக்ஷ்மியின் ஆசை பங்கமடைந்தால் அவளுடைய நிலைமை என்னவாகுமோ என்று நினைத்தபொழுது என் மனம் அதிக வேதனை யடைந்தது. உபாத்தினி வேலையில் சம்பாதிப்பதைக் கொண்டு இவர்களுடைய குறைகளில் ஒன்றையும் நீக்க முடியாது என்றும் எனக்குத் தோன்றியது. என்னுடைய வாழ்க்கை பாழாய்ப் போனாலும், லக்ஷ்மியும் மற்றவர்களும் சுகப்படுவார்களல்லவா என்று நான் மூன்றாம் தாரமாக அவரை மணந்து கொள்ளலாமென்ற முடிவுக்கு வந்தேன்.



மறுகணமே நான் அப்பாவிடம் என்னுடைய எண்ணத்தைத் தெரிவித்தேன். இதைக் கேட்டதும் அவர் திகைத்துப் போனார்!

"என்ன அக்கா! அப்பாவை விடப் பெரியவரான சங்கரய்யரை மணந்து கொள்ள உனக்குப் பைத்தியமா?" என்று கேட்டாள் லக்ஷ்மி.

"என்ன, வசுமதி! என் மனதைப் புண்படுத்த வேண்டுமென்று நினைக்கிறாயா?" என்று கேட்டார் அப்பா.

அம்மாவினால் என் மனதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. என் உயிருக்குயிரான மற்றவர்கள் மனக் கஷ்டமின்றியிருந்தால், அதுவே எனக்குத் திருப்தியையளிக்குமென்று நான் சொன்னபோது அம்மாவின் கண்களில் நீர் ததும்பியது.

அப்பாவை என் விருப்பத்துக்கு இணங்கச் செய்ய வெகு நேரமாயிற்று. என் பிடிவாதத்தைக் கண்டு மனக் கஷ்டத்துடன்தான் அவர் ஒப்புக்கொண்டார்.



★

விவாக தினத்தன்று அந்தத் தெருவே அமர்க்களப்பட்டது. என் விவாகச் செய்தியை அறிந்ததும் அந்தத் தெருவில் உள்ளவர்கள் பலர் எனக்காக அனுதாபப்பட ஆரம்பித்து விட்டார்கள். பணத்துக்கு ஆசைப் பட்டு என் பெற்றோர்கள் செய்யும் அக்கிரமம் இது என்பது அவர்களின் எண்ணம்!

இன்னொரு எதிர்பாராத சம்பவமும் அன்று நடந்தது. அந்தத் தெருவிலுள்ள சில பணக்கார வாலிபர்கள் என்மேல் இரக்கம் காட்டுவதாகப் பாவித்து, முகூர்த்த வேளைக்குள் போலீஸ் அதிகாரியை அழைத்து வந்து விட்டார்கள். இதைக் கண்டு என் அப்பா மனக் கலக்கம் அடைந்து விட்டார். அங்கிருந்த மற்றவர்களும் செய்வது இன்னதென்று அறியாது விழித்தார்கள். இதையறிந்த நானும் என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு நிமிஷம் திகைத்தேன். பிறகு, "யார் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்!" என்று துணிந்து, "போலீஸை எதற்காக இங்கே அழைத்து வந்தீர்கள்?" என்று அந்த வாலிபர்களை நோக்கிக் கேட்டேன்.

"இந்த அக்கிரமத்தைத் தடுப்பதற்காகத்தான்!" என்று அவர்கள் பதில் சொன்னார்கள்.

அதற்குமேல் என்னால் பொறுக்க முடியவில்லை. "உங்களுக்கு மிக்க வந்தனம்! என் மேல் இத்தனை கருணை காட்டும் இளங்காளைகளான உங்களில் ஒருவர் முன் வந்து, இதுவரை ஆகியிருக்கும் விவாகச் செலவையும் ஏற்றுக்கொண்டு, பரம ஏழையாகிய என் பெற்றோரின் மனம் குளிர இதே முகூர்த்தத்தில் என்னை மணந்து கொள்ளத் துணிவீர்களானால், இந்த அக்கிரமத்தை நிறுத்திவிடலாம். என்ன சொல்கிறீர்கள்?" என்று ஆவேசத்துடன் கேட்டேன்.

அதற்குப் பிறகு அந்த வீர வாலிபர்களும் போலீஸ் அதிகாரியும் அங்கு நிற்கவே யில்லை!

இத்தனை விசேஷங்களுடன் இந்த வாழ்க்கையை நான் ஏற்றுக் கொண்ட மறு வருஷம், என் கணவரின் தயவினால் எவ்விதத் தடையுமின்றி லக்ஷ்மி, தான் விரும்பிய ராஜுவை 'வரதக்ஷிணை' என்ற பெயரால் போதிய பணம் கொடுத்துக் கல்யாணம் செய்து கொள்ள முடிந்தது. அன்றுதான் என் உள்ளத்தை நன்கு அறிந்து கொண்டாள் லக்ஷ்மி. அப்பொழுது அவள் தன்னுடைய உணர்ச்சியை அடக்க முடியாமல், என் மடியில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு வெகு நேரம் விம்மி விம்மி அழுதாள்.

மற்றவர்கள் என்னைப் பற்றி எப்படி நினைத்தாலும், நான் என்னுடைய கணவரின் வயதைப் பற்றியும் ரூப சௌந்தரியத்தைப் பற்றியும் கொஞ்சங்கூடச் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை. எனக்காக என் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரையுமே ஆதரித்து வரும் அவருடைய உதார குணத்துக்கு முன்னால், அவை யெல்லாம் அர்த்த மற்றவைதானே?

# பாரதி மண்டபத் திருவிழா

ஸ்ரீமதி சகுந்தலா பாரதி

எட்டயபுர பாரதி மண்டபக் கலைக் கோயிலின் திறப்பு விழாவிலே ஓவியம், சிற்பம், சங்கீதம், கவிதை இவற்றின் சார்பாகக் கலைவாணிக்குக் காணிக்கை செலுத்தப்பட்டது.

என் தந்தையாருக்கு மிக்க விருப்பமான மற்றொரு கலை பரத நாட்டியம். தக்க வசதிகளும் முன்னேற்பாடும் இல்லாமலே விழாப் பந்தலில் எங்கள் குடும்பத்தாரின் வேண்டுகோளுக் கிணங்க 11வ இரவு ஆனந்தி - ராதா நாட்டியம் ஏற்பாடு செய்து கொடுத்த வரவேற்புக் கமிட்டியாருக்கு, நாட்டியத்தைக் கண்டு களித்த எட்டயபுரத்தார் சார்பாக நன்றி செலுத்துகிறேன்.

திறப்பு விழா மேடைமீது ஸ்ரீ சிவஞான கிராமணியவர்கள் உணர்ச்சி ததும்பப் பேசினார்கள். ஒரு விஷயம் மட்டும் அவர்கள் சரியாக அறிந்து கொள்ளவில்லை யென்று தெரிந்தது.

பாரதியாரின் புஸ்தகங்களைப் பற்றிய எந்தவித உரிமையும் பாரதி குடும்பத்தாரிடம்—அதாவது, பாரதியாரின் மனைவி மக்களின் வசம் இல்லை. மேற்படி உரிமைகளைச் சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னரே அப்பொழுதிருந்த நிலைமைக்கு ஏற்பச் சொற்பத் தொகைக்குப் பாரதி பிரசுராலயத்தாருக்குக் கொடுத்து விட்டார்கள்.

திருவிழா மண்டபத்தில் கூடியிருந்த பாரதி அன்பர்கள் பலர், பாரதி பாடல்களை அவர் பாடிய மாதிரியிலேயே கேட்க விருப்பம் கொண்டிருந்தார்கள். பாரதி பாட்டுக்களை அவர் பாடிய பாணியிலேயே பாடுவதற்கு பாரதி விழா நிர்வாகிகள் சிறிது நேரம் ஏற்பாடு செய்திருந்தால் மிக்க நன்றாக இருந்திருக்கும்.

தமிழ்நாட்டுச் சபைகளில் வழக்கமாகப் பாடப்படும் 'வாழிய செந்தமிழ்' என்ற மங்களப் பாட்டு பாரதி மண்டப விழாவில் கேட்கவில்லை என்று சிலர் வருத்தப்பட்டார்கள். அவர்களுக்கு ஆறுதலளிக்கும் ஒரு நற்செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பாரதி ஞாபக மண்டபத்தை ராஜாஜி திறந்து வைத்த புனித வேளையிலே, எங்கள் குடும்பத்தார் மண்டபத்துக்குள் பிரவேசிக்கும்போது, நமது ஹிந்துக்களின் வழக்கப்படி மங்கள வாத்தியம் முழங்க, கௌரி கல்யாணம் பாடுவது போல 'வாழிய செந்தமிழ்' என்ற மங்கள கீதத்தை நானும் என் சகோதரி தங்கம்மாள் பாரதியும் எங்கள் குழந்தைகளும் பாடிக்கொண்டு சென்றோம். மண்டபத்தினுள்ளே ராஜாஜிக்கு வணக்கம் செலுத்தி அவரது ஆசீர்வாதமும் பெற்றோம்.

சொந்த விஷயமாக ஒரு வார்த்தை: கூட்ட நெருக்கடியில் மண்டபத்தினுள் எனது கைக் கடிகாரம் தங்கச் சங்கிலியுடன் கீழே விழுந்துவிட்டது. ஒலி பெருக்கி மூலம் அதை உடனே கூறி, எடுத்தவர்களைத் திரும்பக் கொடுக்கச் சொல்லும்படி நண்பர்கள் யோசனை கூறினார்கள். மிகப் பெரிய — புனிதமான—கைங்கரியத்தைத் தமிழர்கள் ஆற்றும் நல்ல வேளையில், விழா கலவரமில்லாது இனிது நடைபெற வேண்டுமென்ற எண்ணம் மட்டுமே என் மனத்தில் நின்றது. அதனால் கைக்கடிகாரம் போன விஷயத்தைக் கூறி விழா நிர்வாகிகளுக்குச் சிரமம் கொடுக்க நான் அப்போது விரும்பவில்லை. ஒருவேளை யாராவது கடிகாரத்தைக் கண்டெடுத்திருந்தால் தயது செய்து "கல்கி" ஆசிரியர் விலாசத்துக்கு அனுப்பிக் கொடுக்கக் கோருகிறேன்.


★ பாரதி நினைவு மலர் ★

உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் சித்திர விசித்திர வர்ண அலங்காரங்களுடன் வெளியிடப்பட்டிருக்கிறது.

பிரதி ஒன்றின் விலை ரூ. 3. தபால் செலவு உள்பட ரூ. 3-8-0

வி. பி. பி. யில் அனுப்புவது கிடையாது

மானேஜர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை






உலகில் நடக்கும் விசித்திரங்களில் மயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரர் திருக்கோபுரமும் ஓர் விசித்திரமானது!
தாய்மார்கள் சகோதரிகள் அணியும் ஆடைகளும் கண்கொள்ளாக் காட்சியாக அவ்வப்போது மாறி வருகிறது!

நம் சுதந்திர தீபாவளியின் நிமித்தமாக ஏராளமான புது மோஸ்தரில் விசித்திரமான பார்டர்கள் பொருந்திய ஆடைகள் வந்துள்ளன.

எமது ஆயிரக்கணக்கான வாடிக்கைக்காரர்கள் கண்டு களிக்க தனித்தனி அழைப்பு அனுப்ப முடியாமையால் யாவரும் இதையே அழைப்பாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறோம்.

யாவரும் விஜயம் செய்து திருக்கோபுரத்தைத் தரிசித்து வாழ்க்கையின் சிகரமான ஆடைகளை முன்னதாக வாங்கி ஆனந்தமாக நம் சுதந்திர தீபாவளியைக் கொண்டாடுவோமாக!

ஆரணி ஸில்க் ஹௌஸ்

போன்: 86349

4, சன்னதித் தெரு, மயிலாப்பூர், மதராஸ்-4

பம்பாய் கிளை: நெ. 3, தேவ்ஜி-மேக்ஜி பில்டிங்ஸ்
பண்டேர்கார் ரோட் :: மாதுங்கா G.I.P.

டில்லி: சவுத் இந்தியன் கிளப் கோவாபரேடிவ் சப்ளை சொஸைடி

# மீனம்பட்டி மிராசுதார்

லக்ஷ்மீதரன்

"ஏ, காவாலிப் பயலுவளா, என்னடா செய்கிறீங்க அங்கே? யார் உத்தரவின் பேரிலே வாய்க்காலே வெட்டுறீங்க?...... டேய், சின்னப் பையா! டேய், காளிமுத்து! நிறுத்துறீங்களா, இல்லியா? களுதைப் பயங்களா! திமிர் எறிடுச்சுப் போலேயிருக்கு!" என்று கர்ஜித்துக் கொண்டே மிராசுதார் மாணிக்க முதலியார் வயல் வரப்புமேல் தட்டுத் தடுமாறி ஓடி வந்து கொண்டிருந்தார்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்களை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது அந்தச் சத்தம். ஆனால் அந்தக் கிராமத்திலேயே தைரியத்துக்கும், நிதானத்துக்கும் பெயர்போன சின்னப் பையன் என்பவன் மாத்திரம் தான் பிடித்த மண் வெட்டிக்கு மும்முரமாக வேலை கொடுத்துக் கொண்டிருந்தான். மற்றவர்கள் தங்கள் கடப்பாரைகள், மண்வெட்டிகளை 'தொப்' பென்று கீழே போட்டுவிட்டு முறைப்படி கைகட்டி, வாய் பொத்தி நின்றார்கள்.

"என்னடா! சொல்றேன், நீபாட்டுக்கு வெட்டிக்கிட்டே யிருக்கே! நாயே, மம்மட்டியைக் கீளே போடறயா, இல்லை, அதாலேயே உன் மண்டையைப் பொளக்கட்டுமா?" என்று ஆத்திரத்துடன் கத்தினார் முதலியார்.

"நாங்க என்ன செய்வோம், எசமான்! பட்டணத்து முதலியார் இந்த வாய்க்காலை வெட்டித் தண்ணியை அவரு வயப்பக்கம் கொஞ்சம் திருப்பச் சொன்னாரு......!"

"ஓஹோ! நேத்து வந்த பய ஏதோ செய்யச் சொன்னானாம். சரின்னு இந்த மானங்கெட்டவங்க செய்ய வந்துட்டாங்களாம். என்னைக் கேட்காமே என் வாய்க்காத் தண்ணியை அவன் எப்படிடா பாச்சிக்க முடியும்?......மூடுங்கடா மரியாதையா!"

"சாமி! நீங்க பேசறது நாயமா இருக்குதா, பாருங்க! கிராமத்துக்கெல்லாம் பொதுவான சொத்து இல்லீங்களா இந்த வாய்க்காத் தண்ணி?, எல்லாருந்தானுங்களே இந்த நீராலே பயிர் சேஞ்சாவணும்?"

"டேய், அயோக்கியப் பயலே! உண்ட வீட்டுக்கு ரெண்டகமா நெனைக்கிறே! எனக்குப் புத்தி புகட்ட வேறே கிளம்பிட்டாயா நீ?" என்று உறுமிக் கொண்டே மாணிக்க முதலியார் சின்னப் பையன்மீது பாய்ந்தார்.

இந்தச் சமயத்தில், "முதலியார்வாள்! என்ன காரியம் செய்யத் துணிஞ்சிட்டீங்க?" என்ற குரலைக் கேட்டு, ஒரு கணம் தயங்கினார் மிராசுதார். ஆம்; மாணிக்கத்தின் விரோதி, பட்டணத்திலிருந்து புதிதாக வந்திருக்கும் அந்தச் சிங்காரவேலு முதலியின் குரல்தான் அது.

மிடுக்குடன் திரும்பினார் மிராசுதார். அவமானம் ஒருபுறம். அடக்க முடியாத ஆத்திரம் ஒரு புறம். "சிங்காரவேலு, நீ ஆழம் தெரியாமே காலை வுட்டிருக்கே! பத்துத் தலை முறையா எங்க குடும்பத்துக்கு எதிராப் பேசியோ, சூழ்ச்சி சேஞ்சோ ஒருத்தரும் இந்த ஊரிலே பொழைச்சது கிடையாது! மரியாதையாத் தப்பை ஒத்துக்கிட்டு, ஆளுங்களைப் போவச் சொல்லு!" என்று மாணிக்க முதலியார் உரத்த குரலில் சொன்னார்.

சிங்காரவேலு சித்தம் கலங்கவில்லை. "இதோ பாருங்க! நீங்க சொல்லுவது நியாயம் அல்ல. இதை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஓடற தண்ணியை ஒருத்தன் தனக்குச் சொந்தம்னு சொன்னா பால் குடிக்கிற கொளந்தையும் கூடச் சிரிக்கும். முன் வைச்ச காலை நான் பின்வைக்கப் போவதில்லை. ஒங்களாலே ஆனதைப் பாருங்கோ!" என்று அவன் சுருக்கமாகச் சொல்லி முடித்து, அலட்சியமாகத் தோளில் சவுக்கத்தை உதறிப் போட்டுக் கொண்டான்.

முதலியாருக்குக் கோபம் பொங்கிற்று. என்ன சொல்வதென்று அவருக்குப் புரியவில்லை. "உன்னோடு சரி சமமா நின்னு பேசுவேன் என்று நெனைச்சியா? வியாஜ்ஜியம் போட்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே உன் மானத்தை வாங்காட்டி நான் மாணிக்கம் இல்லை. கோர்ட்டிலே மாஜிஸ்ட்ரேட் மூலமா உனக்குப் பதில் சொல்லுறேன்" என்று கூறிவிட்டு 'விர்'ரென்று நடந்தார் மிராசுதார்.

* * *

மீனம்பட்டி கிராமம் முழுவதும் மாணிக்க முதலியார் ஆட்டி வைத்தபடி ஆடிக் கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான எகரா பூமிக்கு மிராசுதார் என்றால் கேட்க வேண்டுமா அவர் ஜபர்தஸ்துக்கு? அவ்வளவும் அவருடைய பரம்பரைச் சொத்து. பணத்திலே பிறந்து பணத்திலே புரண்டு வந்த அவருக்கு, ஏழை மக்களுடைய பரிதாப நிலைமை புரிய நியாயமில்லை. அவரைத் தவிர மிராசுதார் என்று சொல்லக் கூடியவர்கள் அந்தக் கிராமத்தில் இல்லை என்றே சொல்லவேண்டும். சொந்த நிலத்தில் பயிர் செய்து ஜீவனம் செய்த விவசாயிகளை விரல் விட்டு எண்ணி விடலாம். ஆதலால், 'சகல சௌகரியங்களும் சலுகைகளும் தனக்கு, சலிப்பும் சங்கடமும் தன்னை அண்டி நின்றோருக்கு!' என்பதை இயற்கையின் நியதி என்று அவர் மனப்பூர்வமாக நம்பினார்.

சந்தேகம் என்ன? சிங்காரவேலு ஓர் ஏழைதான். நூற்றுக் கணக்கான எகரா பூமி எங்கே? நாலுவேலி நிலம் எங்கே?

சிங்காரவேலு அந்த ஊருக்குப் புதியவன். அவனுடைய பெற்றோர்கள் பட்டணத்துக்குப் போய் வெகு காலமாகிறது. அவன் பட்டணத்திலேயே படித்தான். அவனுக்கு உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை. வெகு காலமாக ஊரில் தரிசாகக் கிடக்கும் நிலத்தை உழுது பயிரிட வேண்டும் என்று அவன் விரும்பினான். ஆகவே, சொந்த ஊருக்கு வந்தான்.

அவன் கிராமத்துக்கு வந்தது முதல் அவனை அலக்ஷியமாக நடத்தினார் மிராசுதார். அவன் ஓர் ஏழையானதால் அவனை 'வைக்க வேண்டிய இடத்தில் வைப்பது' என்று வைராக்கியம் கொண்டார். ஒரு நாள் சிங்காரவேலு மாணிக்க முதலியாரை நெருங்கி, "முதலியார்வாள், என்னுடைய நிலத்தைச் சாகுபடி செய்யப் போகிறேன். அதுக்கு உங்க அனுபோகத்திலே யிருக்கும் வாய்க்காத் தண்ணியைப் பாய்ச்சியாவணும். வாய்க்கால் வெட்டணும்னா ஒங்களுக்கு வரி கொடுக்கணும்னு கேள்விப்பட்டேன். கடவுளாகப் பார்த்து எல்லோருக்கும் கொடுத்திருக்கும் அந்த நீரிலே எனக்கும் சொந்த முண்டுன்னு நினைக்கிறேன். காலத்தை அனுசரிச்சு நீங்களும் உங்க மனசை மாத்திப்பீங்கன்னு நம்பறேன்!" என்றான்.

"டேய், தம்பி! ரெண்டு வார்த்தை படிச்சுட்டேன்னு கர்வம் போலேயிருக்கு. என் அந்தஸ்தென்ன? உன் பவுசு எங்கேடா? மலையைச் சுரண்டிடுவேன்னு எலி வீராப்புப் பேசிச்சாம்! வரி கொடுக்காமே வாய்க்காலை வெட்டினா அதோடே பலனை அனுபவிச்சாவணும்......ஆமா, சொல்லிட்டேன்!" என்று சர்ப்பம்போல் சீறினார் மாணிக்கம்.

சிங்காரம் பதில் பேசாமல் அங்கிருந்து கிளம்பினான். அவன் மிராசுதாருக்குப் பயந்து ஓடுகிறான் என்று அங்கிருந்தோர் எண்ணினர். ஆனால் 'பேசிப் பயனில்லை. செயலில்தான் இறங்க வேண்டும்' என்று எண்ணித்தான் அவன் அவ்விடத்தைவிட்டு அகன்றான் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

இந் நிலைமையில்தான் சிங்காரவேலால் ஏவப்பட்டு, சின்னப் பையன் வாய்க்காலை வெட்ட ஆரம்பித்தான். இதைக் கண்டு மனங் கொதித்த மிராசுதார், சிங்காரவேலு மீது வழக்குத் தொடர்ந்து, தன்னுடைய கட்சியை நிலைநிறுத்தப் போவதாகச் சபதம் செய்து விட்டுப் போனார்.

## 2

காவேரிபுரத்தில்தான் மிராசுதாரின் வக்கீல் கிருஷ்ணய்யர் இருந்தார். ஸப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும் அங்குதான் இருந்தது. தம் ஆப்த நண்பரும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான ஜம்புலிங்க முதலியாருடன் மீனம்பட்டி மிராசுதார் வண்டியைப் பூட்டிக்கொண்டு வியாஜ்ஜியத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வக்கீலின் வீட்டுக்குச் சென்றார்.

"வாங்கோ, முதலியார்வாள்! எங்கே இந்த வெய்யில்லே புறப்பட்டேள்? இப்போதுதான் உங்களைப் பத்தி நினைத்தேன். வண்டியும் வந்தது..." என்று கட்சிக்கார கனவானை வழக்கப்படி வரவேற்றார் வக்கீல் கிருஷ்ணய்யர்.

மிராசுதார் தான் வந்த காரியத்தையும் வழக்கின் காரணத்தையும் வக்கீலிடம் சாங்கோபாங்கமாக எடுத்து உரைத்து விட்டு, "நீங்க என்ன நெனைக்கிறீங்க? நம்ப பக்கம் நாயம் இருக்கா இல்லையா?" என்றார்.

"என்ன, மிராசுதாருக்குச் சந்தேகம் வந்துடுத்து? நீங்க ஒரு வழக்கைக்

கொண்டு வந்து, அதுக்கு நான் வாதாடுகிறேன் என்றால் அதில் நியாயமில்லாமல் போயிடுமா? இல்லே, நாம் ஜயிக்காமல் தான் போயிடுவோமா?"

"அப்படிச் சொல்லுங்கோ! எனக்குப் பணம் பெரிதில்லே; மானந்தான் பெரிது!" என்றார் முதலியார் பெருமையாக.

"இதை எனக்குச் சொல்லணுமா என்ன! ஒங்களுக்குத்தான் பணம் தண்ணி பட்ட பாடாச்சே!" என்று சாதுர்யமாகச் சொன்னார் வக்கீல்.

"நாற்பதாயிரம், ஐம்பதினாயிரம் வேண்டுமானாலும் செலவழிச்சுப் பார்த்துடறேன். மாஜிஸ்ட்ரேட்டும் மனுசன்தானே? பணத்தைத் தூக்கி எறிஞ்சாப் போச்சு. நம்ப பக்கம் தீர்ப்புக் கூறாமே போயிடுவானா?" என்று மிராசுதார் சொன்னதும், வக்கீல் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "என்ன முதலியார்வாள்! என்ன காரியம் செய்யத் துணிஞ்சிட்டேள்? சப் மாஜிஸ்ட்ரேட் மேகநாதம் பிள்ளையா லஞ்சம் வாங்குகிறவர்? நேர்மைக்கும் நல்ல நடத்தைக்கும் பெயர் போனவராயிற்றே அவர்? அதுவுமல்லாமல் லஞ்சம் கொடுக்க முன் வராவளை ஜெயிலில் போடவும் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு ஸ்பெஷல் அதிகாரமுண்டு. நீங்க அதெல்லாம் ஒண்ணும் செய்யவேண்டாம் ......நான் பார்த்துக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, ஜம்புலிங்கத்தின் பக்கம் திரும்பினார். அவரும் வக்கீல் சொன்னது அவ்வளவும் 'வாஸ்தவம்' என்பது போல் தலையை அசைத்தார்.

மிராசுதாருக்கு வக்கீல் சொன்னது பிடிக்கவில்லை. "பணம்னா பொணமும் வாயைத் திறக்குமே! நூறு இருநூறுன்னு கொடுத்தா ஒரு வேளை கை நீட்டி வாங்காமல் இருக்கலாம். ஆயிரக் கணக்கிலே கொடுத்தா வாங்கிக்கக் கசக்குதா? அவன் ஆயுசெல்லாம் சேர்த்தாலும் அவ்வளவு பணத்தை அவன் பார்க்க முடியாதே!" என்று தமக்குள் சொல்லிக் கொண்டு, கிருஷ்ணய்யரிடம் வழக்கு விஷயமாகச் சீக்கிரம் காரியங்களை முடிக்கும்படி சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

வெளியே வந்ததும் ஜம்புலிங்கத்தினிடம் இருபதாயிரம் ரூபாயைக் கொடுத்து, எப்படியாவது மாஜிஸ்ட்ரேட்டிடம் அதைச் சேர்த்துவிடும்படி சொல்லிவிட்டு அவர் மீனம்பட்டிக்குத் திரும்பி விட்டார்.

இரண்டு நாட்களுக்கெல்லாம் ஜம்புலிங்கத்தினிடமிருந்து மிராசுதாருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் பணம் சேர வேண்டிய இடத்தில் சேர்ந்து விட்டது என்றும், சிங்காரவேலுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பிவிட்டார் என்றும், வியாஜ்ஜியம் இருபதாந் தேதி விசாரணைக்கு வருகிறதென்றும் கண்டிருந்தது.

## 3

அன்றுதான் இருபதாம் தேதி. மீனம்பட்டி வாய்க்கால் வழக்கு காவேரிபுரம் சப் மாஜிஸ்ட்ரேட் மேகநாதம் பிள்ளையின் முன்பு விசாரணைக்கு வந்தது. வாதியும் பிரதிவாதியும் தங்கள் தங்கள் காகிதக் கட்டுக்களுடனும், வக்கீல்களுடனும் குறித்த மணிக்கு முன்பாகவே வந்து விட்டார்கள். அக்கம்பக்கத்திலுள்ள கிராமத்தார்களும் தீர்ப்பு என்ன வென்பதைத் தெரிந்து கொள்வதற்காக அழைக்காமலே வந்து சேர்ந்தார்கள்.

கிருஷ்ணய்யர் குதூகலமாகக் காட்சியளித்தார். 'வெற்றி நமதே' என்று சொல்வது போலிருந்தன அவருடைய பேச்சும் பார்வையும். மிராசுதார் அவ்வப்போது தம் வக்கீல் முகத்தைப் பார்த்து, தம்மைத் தைரியப்படுத்திக் கொண்டார். சிங்காரவேலும் சிரித்த முகமாகவே இருந்தான்.

"ஸயலன்ஸ்!" என்று டவாலிச் சேவகனுடைய குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து சப் மாஜிஸ்ட்ரேட் மேகநாதம் பிள்ளையும் கோர்ட்டுக்குள் நுழைந்தார். யாவரும் மாஜிஸ்ட்ரேட்டையே கண்



கொட்டாமல் கவனித்தனர். அவர் ஒரு கனைப்புக் கனைத்துவிட்டுப் பேசத் தொடங்கினார். "இந்தக் கேஸ் முழுவதும் ஆராய்ந்து பார்த்தாகி விட்டது. இதில் சந்தேகத்துக்கு ஒரு விஷயமும் இல்லை என்பது என் அபிப்பிராயம். இருந்தாலும் இருதாத்து வக்கீல்களும் தங்கள் கட்சியை எடுத்துச் சுருக்கமாகச் சொல்லி விடவும். இன்றைக்கே தீர்ப்புக் கூறி விடுகிறேன்" என்று கச்சிதமாகச் சொல்லி முடித்தார்.

வக்கீல் கிருஷ்ணய்யர் அதிகம் பேசினால் ஆபத்து நேரலாமென்று அஞ்சி, சுருக்கமாகத் தம் வாதத்தை முடித்துக் கொண்டார். அந்த வாய்க்கால் தம் கட்சிக்காரராகிய மிராசுதாருக்குப் பாம்பரையாக வந்த சொத்து என்றும், இவ்வளவு நாட்கள் அவர் மூதாதைகள் அதைச் சொந்தமாகக் கருதி வந்ததைப் போலவே தம் கக்ஷிக்காரரும் நடந்து கொண்டார் என்றும், முன்பு அவர்களுக்கிருந்த அதே நியாயமும் பாத்யதையும் இப்போது மாணிக்க முதலியாருக்கும் உண்டு என்றும், ஆதலால் கோர்ட்டார் தம் கட்சிக்காரருக்கு நியாயம் வழங்க வேண்டுமென்றும் சொல்லி அவர் உட்கார்ந்தார்.

சிங்காரத்தின் வக்கீல் மிஸ்டர் கே. மூர்த்தி எழுந்து, இயற்கை ஈந்தளித்த அந்த வாய்க்கால் தண்ணீர் பொதுச் சொத்தென்றும், மிராசுதாரின் பரம்பரைச் சொத்தானது பழக்கத்தினால் உண்டான பாத்யதை யானதால், அதைப் பறித்துப் பொது மக்களின் உரிமையைக்காக்க வேண்டுமென்றும் சொல்லி, தம் வாதத்தை ரத்தினச் சுருக்கமாக முடித்துக் கொண்டார்.



மேகநாதம் பிள்ளை என்ன சொல்லப் போகிறாரோ என்று வந்திருந்தோர் யாவரும் வாயைப் பிளந்து நின்றனர். மிராசுதார் மூச்சு நின்று விடும் போலிருந்தது. அவருடைய கௌரவமும் கிராமத்தார் உரிமையும் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தன. மேகநாதம் பிள்ளை தம்முடைய தீர்ப்பை வாசித்தார். "நான் முன்பு சொன்னபடி இந்த வழக்கை அலசவேண்டிய அவசியமில்லை. பிரதிவாதியான சிங்காரவேலு முதலியார் ஒரு அயோக்கியன், சுயநலக்காரன் என்று நான் எண்ணுகிறேன். ஆகையால் மிராசுதார் மாணிக்க முதலியாருக்குச் சாதகமாக நான் தீர்ப்புக் கூறுகிறேன். இத்துடன் கோர்ட் கலைகிறது!" என்று கம்பீரமான குரலில் கூறிவிட்டு, அவர் மின்னல் வேகத்தில் கோர்ட்டை விட்டு அகன்றார்.

தம் வெற்றியைக் கோலாகலமாகக் கொண்டாடினார் மிராசுதார். அக்கம் பக்கத்திலுள்ள முதலாளிகளும் மிராசுதார்களும் மீனம்பட்டியில் வந்து குவிந்தனர். வக்கீல் கிருஷ்ணய்யரும் ஆஜராகியிருந்தார்.

"என்னமோ சொன்னீங்களே! மாஜிஸ்ட்ரேட் லஞ்சம் வாங்கமாட்டார், அப்படி இப்படின்னு! பாத்திங்களா, பணம் பண்ணின வேலையை?" என்று அவரிடம் பெருமை அடித்துக் கொண்டார் மிராசுதார்.

இந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாக அங்கே சிங்காரவேலு வந்து சேர்ந்தான்.

"மிராசுதார்வாள்! ஒங்களுக்கு ரொம்ப வந்தனம். ஜனங்களுக்குச் சௌகரியம் பண்ண எனக்கு நீங்க பண்ணியிருக்கிற உதவி ரொம்பப் பிரமாதம். ஏழையான எனக்கு ஏகப்பட்ட பணத்தைக் கொடுத்து இந்தத் தீர்ப்பை மேல் கோர்ட்டுக்கு அப்பீல் பண்ணி வேணுங்கிறதைச் செய்யறத்துக்கு வேண்டிய உபகாரம் பண்ணியிருக்கீங்க! இதுக்கு நானும் இந்தக் கிராமத்து மக்களும் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கோம்.........!" என்று ஆரம்பித்தான் சிங்காரம்.

இதைக் கேட்ட எல்லோரும் திகைத்துப் போயினர். கிணற்றில் கல் போட்ட மாதிரி இருந்தது சற்று நேரம். தோல்வியால் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும் என்று எண்ணிய மிராசுதார் பேச ஆரம்பிப்பதற்குள், சிங்காரவேலு ஒரு கடிதத்தை எடுத்து அவரிடம் நீட்டினான்.

காவேரிபுரம்.

ஸ்ரீ சிங்காரவேலு முதலியாருக்கு,

தங்களுடைய செயலுக்கு நான் தக்க தண்டனையைத் தராமல் தாராள மனதுடன் இருபதாயிரம் ரூபாயையும் திருப்பி யனுப்பி

யிருக்கிறேன். நீங்கள் லஞ்சம் கொடுக்க எண்ணியதால் உங்கள் கட்சியில் நியாயம் இல்லை என்றே நான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இது என்னுடைய கடைசி வழக்கு. இத்துடன் நான் 'ரிடையர்' ஆகிறேன். என் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு இனிமேலாவது லஞ்சம் கொடுத்து நியாயத்தைப் பெற முயலாதீர்கள்.

இப்படிக்கு,
மேகநாதம் பிள்ளை,
மாஜிஸ்டிரேட்.

இதைப் படித்த வக்கீலுக்கும் கேட்டுக் கொண்டிருந்த மிராசுதாருக்கும் மற்றவர்களுக்கும் கண்கள் இருண்டன; காதுகள் அடைத்துப்போயின; தொண்டை வறண்டு விட்டது. ஏதோ ஒரு பெரிய பாரம் கழுத்தில் கட்டப்பட்டு, கடலின் ஆழத்தைக் காணப் பாதாள லோகத்துக்குப் போவது போலிருந்தது.

"ஒண்ணும் புரியவில்லையா! இதோ, இந்தக் கடிதாசைப் படிக்கிறேன், கேளுங்கோ!" என்று தன் பையிலிருந்த மற்றொரு கடிதத்தை எடுத்துப் படித்தான் சிங்காரம்.

மீனம்பட்டி.

மாஜிஸ்ட்ரேட் ஐயாவுக்கு,

மிகவும் வணக்கத்துடன் அடியேன் எழுதிக் கொண்டது.

இந்தக் கிராமத்து மிராசுதார் மாணிக்க முதலியார் தொடுத்திருக்கும் வழக்கில் நான் தான் பிரதிவாதி. என் மதிப்பையும், மரியாதையையும் உங்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு இந்தப் பணத்தை இத்துடன் அனுப்பி வைக்கிறேன். 20-ந் தேதி யன்று வழக்கு விசாரணைக்கு வருகிற தென்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

இப்படிக்கு,
சிங்காரவேலு.

"இந்தக் கையெழுத்தைப் பார்த்து யார் எழுதினாங்கன்னு தெரிஞ்சிக்கோங்க!" என்று சிரித்த வண்ணமாக அதை மிராசுதாரிடம் கொடுத்தான் சிங்காரம்.

மிராசுதார் அவமானத்துடனும் கோபத்துடனும் ஜம்புலிங்கம் நின்ற பக்கம் திரும்பினார். ஆடு திருடிய கள்ளன் மாதிரி பேந்தப் பேந்த விழித்தார் ஜம்புலிங்கம். பயத்தில் அவர் தட்டுத் தடுமாறிப் பேசியதின் சாராம்சம் இதுதான்:

மாஜிஸ்ட்ரேட்டுக்கு யாராவது லஞ்சம் கொடுத்தால் அவர் அவனுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூற மாட்டார் என்றும், கொடுத்தவனையே சிறையில் போடுவாரென்றும் அன்று வக்கீல் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜம்புலிங்கம், தன்னிடம் மிராசுதார் கொடுத்த பணத்தைச் சிங்காரவேலு லஞ்சம் கொடுப்பதுபோல் மேகநாதம் பிள்ளைக்கு அனுப்பியதாகவும், இதனால் சிங்காரவேலுவை ஒழித்து, மிராசுதாரைக் காப்பாற்றலாம் என்று தான் எண்ணியதாகவும், ஆனால் தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்து விட்டதென்றும் சொல்லி முடித்தார்.

தான் லஞ்சம் கொடுத்ததாக நினைத்த மாஜிஸ்ட்ரேட், நேர்மைக்கு நிகரற்றவராகையால் தனக்கு எதிராகத் தீர்ப்புக் கூறியிருக்கிறார் என்பது சிங்காரவேலுக்குப் புரிந்துவிட்டது. ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து, பெரிய வக்கீல்களையும் வைத்து வழக்கை நடத்தினால், வெற்றி தனது என்றும் அவன் அறிந்தான். மீனம்பட்டி மிராசுதார் மாணிக்க முதலியாருக்கும் தம்முடைய அட்டகாசத்தின் அந்திய காலம் நெருங்கிவிட்டது என்பது தெரிந்து விட்டது. இந்த ஆபத்திலிருந்து தப்புவதற்கு என்ன வழி என்று அவர் யோசிக்கலானார். கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்போல் தம் வெற்றிக் கொண்டாட்டத்தை வெகு சீக்கிரத்திலேயே முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார். அவருடைய அழைப்புக்கு இணங்கிச் சிங்காரவேலும் அவரைப் பின் தொடர்ந்து சென்றான்.

* * *

சமீபத்தில் ஒரு நாள் நான் ரயில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். இரவு பத்து மணி யிருக்கும். ரயில் மீனம்பட்டி ஸ்டேஷனில் நின்றது. அப்போது பிளாட்பாரத்தில் இருவர் பேசிக்கொண்டது என் காதில் விழுந்தது:

"என்ன அண்ணே! சேதி காதுலே விழுந்திச்சா! மிராசுதாரய்யா சிங்காரவேலுவைச் சுவீகாரம் செஞ்சிகிட்டாராமே! காலம் போற போக்கைப் பாத்தியா? உலகத்திலே என்னதான் அக்குரும்பும், அநியாயமும் நடந்தாலும் கடவுள் ஒருத்தரு இல்லாமே போயிடலேன்னு, இதுபோல சமயங்களிலேதான் மனுசன் தெரிஞ்சிக்கிறான்!" என்றான் ஒருவன்.

"ஆமாம், தம்பி! அதுலே என்ன சந்தேகமிருக்கு? சிங்காரவேலு சின்ன எசமான் ஆனப்பறம் நம்பளுக்கு என்ன கொறை யிருக்குதுங்கறேன்?" என்று மகிழ்ச்சி ததும்பக் கூறினான் மற்றவன்.





நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம்பிறை வடிவாகக் கட்டினாலும் சரி—கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்க மாட்டா, ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும் கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங் கூந்தலைப் பெறுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் ஒருங்கே அடையுங்கள்.

## கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை, அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்





Chockar

எங்களிடம் தயாராகும் உன்னத பிஸ்கட்கள்:

"மேரி" & "நைஸ்" 1 பவுண்டு டின்களில்

"குளுகோஸ்" காற்றுபுகாத ½ பவுண்டு அட்டைப் பெட்டிகளில்

"குளுகோஸ்" ¼ பவுண்டு பாக்கெட்டுகள்






# நாவன்மை

கு.ரா

நம்முடைய உடம்பின் எந்த உறுப்பை வேண்டுமானாலும் நாம் இழக்கத் தயாராக இருப்போம்; ஆனால் நாக்கை இழப்பது என்பது மாத்திரம் முடியாது. நாக்குதான் இந்த ஜனநாயக யுகத்தின் மூலாதாரம். ஆயிரம் கத்திகள் சாதிக்காத புரட்சியை ஒரு நாக்கு சாதிக்க முடியும். நாக்கின் புரட்சிக்கும் நாட்டின் புரட்சிக்கும் அவ்வளவு ஒற்றுமை இருக்கிறது!

நாக்கை நாம் வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும் என்று வள்ளுவர் கட்டளையிட்டிருக்கிறார். எதைக் காக்கா விட்டாலும் நாக்கைக் காக்க வேண்டியது அவசியம் என்பது அவருடைய கொள்கை.

"யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு!"

வல்லோசைகள் நிறைந்த இந்தப் பாட்டைப் படித்த பிறகும் உங்கள் நாக்கு பத்திரமாய் இருந்தால், உங்கள் நாக்கைக் காப்பாற்றும் விஷயத்தில் நீங்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டிய அவசியமேயில்லை!

பொதுக்கூட்டப் பிரசங்கியின் நாவன்மை, வக்கீலின் நாவன்மை இந்த இரண்டும் பிரசித்தியானவை. இருவரும் "பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே, மெய்போலும்மே" என்ற வாக்கியத்தை மெய்ப்படுத்துகிறவர்கள்போல் பேசுவார்கள். இருவரும்,

"போற்றினும் போற்றுவர், பொருள்கொடா [விடில்
தூற்றினும் தூற்றுவர், சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர்!"

என்ற பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்கக் கூடியவர்கள்!

ஆண்டியை அரசனாக்கவும், அரசனை ஆண்டியாக்கவும் நவீன காலத்து நாவலர்களாகிய வக்கீல்களால் முடியும் என்றால், முன் காலத்து நாவலர்கள் சிலர் தங்கள் பாடல்களால் ஆளையே அழிக்கக்கூடிய வல்லமை பெற்றிருந்தார்களாம், அறம் பாடிய கவிஞர்களுடைய நாக்கில் சரஸ்வதி இருந்தாள் என்று சொல்வதைவிட நமன் இருந்தான் என்று சொல்வது மிகவும் பொருத்தமாய் இருந்திருக்கும்!

சிலருக்கு நாக்கில் சனி இருப்பதுண்டு. இவர்கள் ஏதாவது ஒன்றைக் கொன்றாக உளறிக் கொட்டித் தங்களுக்குத் தாங்களே ஆபத்தைத் தேடிக் கொள்ளுவார்கள். "நுணலும் தன் வாயால் கெடும்" என்ற வசனம் இவர்களுக்காகவேதான் ஏற்பட்டது போலும்!

வேளைக்குத் தகுந்தபடி பொய் பேசிச் சூது புரிந்து எதிர்பார்த்த பலன் கிட்டாமல் அகப்பட்டுக் கொண்டு அவமானம் அடைந்து தலை குனியும் நிலைக்கு வந்து விட்ட ஒருவனைப் பார்த்து உலகம் என்ன சொல்லுகிறது? "இத்தகைய அவமானத்தை அவன் அனுபவிப்பதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு உயிரை விட்டு விடலாம்" என்றுதானே யோசனை சொல்லுகிறது!

'நாக்கில் தீ உள்ளவள்' என்ற அர்த்தத்தில்தான் 'நாத்தி' என்ற பெயர் எழுந்துள்ளது என்பது பல மருமகள்களின் அபிப்பிராயம்.

மனிதனுக்கு நாக்கைப் போலப் பல விதங்களில் உபயோகமான புலன் வேறு எதுவுமே கிடையாது என்னலாம். மற்றைய புலன்கள் எல்லாம் ஒரு தொழில்தான் செய்கின்றன. நாக்கு ஒன்றுதான் பேசுவதற்கும், அறுசுவை உண்டியை அனுபவிப்பதற்குமாக இரண்டு விதங்களிலும் மனிதனுக்கு உற்ற துணையாக இருக்கிறது. சாப்பிட்டுக்கொண்டே பேசவும் முடியும் என்பதை வாயில் வாழைப் பழத்தைப் போட்டுக்கொண்டே பேசும் குழந்தைகளையும், வெற்றிலை, பாக்கு, புகையிலையை வாய் நிறையக் குதப்பிக் கொண்டே 'பேஷ முழலும்' பெரியவர்களையும் பார்த்து அறிந்து கொள்ளலாம். தூங்கும் போதுகூடப் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள் என்றால், என்னே நாவின் வன்மை!

கோரைக்கால் ஆழ்வான் கொடை இலக்கியத்தில் பிரசித்தி பெற்றது. "யானை தருகிறேன்" என்று ஜம்பமாகச் சொன்னவன் கடைசியில் ஒரு கிழிந்த துணியைக் கவிக்குச் சன்மானமாகக் கொடுத்தானாம்.

இந்தவிதமாகச் 'சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக' வாழ்க்கையை நடத்தும் மகானுபாவர்களைப் பார்த்து, "உங்களுக்கு நாக்கு ஒன்றா அல்லது இரண்டா?" என்று நாம் கேட்கிறோம். ஆனால் அவர்களுக்கு இந்தக் கேள்வி 'நாவினால் சுட்ட வடு' போல் உறைப்பதே

இல்லை; ஆகாயத்தில் சுட்ட வேட்டுப் போல் வெறும் சப்தமாத்திரமாக நின்று விடுகிறது!

பாம்புக்கு இரண்டு நாக்குகள் உண்டு. ஒரு வார்த்தையோ, ஒரு கொள்கையோ அதனிடம் கிடையாது. தன்னை நெருப்பி னின்றும் காப்பாற்றிய நளனை முதலில் "உனக்குத் தீங்கு செய்ய மாட்டேன்" என்று சொல்லிவிட்டுப் பிறகு அவனைக் கடித்துவிட்டது. இதனால் நாக்கைப் போலவே கொள்கையிலும் பாம்பு பிளவு பட்ட மனப்பான்மை கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

சிவபெருமானுக்குப் பாம்பு ஆபரணமாய் இருக்கிறது; அதே சமயத்தில் திருமாலுக் குப் படுக்கையாகவும் இருக்கிறது! இரண்டு நாக்குடன் பேசும் வஞ்சக நெஞ்சு படைத் தவர்களிடம் பழகும்போது பாம்புடன் பழகுவது போல் பழகவேண்டும் என்பது இதனால்தான் போலும்!

பிரம்மதேவன் சரஸ்வதியைத் தன் னுடைய நாக்கிலேயே வைத்துப் பாது காப்பதனால்தான் நான்கு வேதங்களையும் அவனால் பிரகடனம் செய்ய முடிந்தது. "அவனுடைய நாக்கில் சரஸ்வதி இருக் கிறாள்" என்றால், அவன் பெரிய வித்வான், கவிஞன் என்று பொருள் கொள்கிறோம். கம்பனுக்கும், காளிதாஸனுக்கும் சரஸ்வதி தேவியே நேரில் வந்து அவர்களுடைய நாக் கில் கவித்துவ சக்தியை எழுதிப் போனாள் என்று நாம் படித்திருக்கிறோ மல்லவா?

நாட்டியக்காரிகள் தங்கள் கால்களை இன்ஷ்யூர் செய்து கொள்ளுவது போல் நாவலர்கள் தங்கள் நாக்குகளை இன்ஷ்யூர் செய்து கொள்ளலாம்., கவிதை பாடிக் கொண்டே வரும் வேகத்தில் நாக்கைக் கடித்துக்கொண்டு விட்டு, அதன் விளைவாக அவர்களால் பாடவே முடியாமல் போய் விட்டால் என்ன செய்வது?

சூர்ப்பனகையின் மூக்கை அறுத்த இலட்சு மணர் அவளுடையநாக்கை மாத்திரம்அறுத் திருப்பாரானால், அவள் இராவணனிடம் போய் சீதையின் அழகை வர்ணித்திருக்க முடியுமா? இராவணன்தான் சீதை யைத் தூக்கிக்கொண்டு போயிருப்பானா?

இலட்சமணன் செய்த இத் தகைய யோசனைக் குறைவான காரியத்தினால் எத்தனையோ பேருக்கு ஆபத்தை உண்டாக்கி விட்டான். சூர்ப்பனகையின் நாக்கு மாத்திரம் வெட்டப்பட் டிருந்தால் இராவணன் முதலிய அரக்கர் களின் தலைகள் வெட்டப்பட் டிருக்குமா?



இவ்விதமாக இராமாயணத்துக்கே முக் கிய காரணமாயிருந்து துஷ்ட நிக்ரகசிஷ்ட பரிபாலனம் செய்ததும் இந்த நாக்குதான்!

கைரேகைகளைப் பார்த்து நம் வாழ்நாளை ஜோஸியர்கள் கணிக்கிறார்கள் என்றால், நம்முடைய நாக்கை நீட்டச் சொல்லிப் பார்த்து வைத்தியர்கள் நம் ஆயுளை அளந்து விடுகிறார்கள்!

கழுகுக்கு மூக்கில் வேர்க்குமாம், அதற்கு வேண்டிய ஆகார பதார்த்தம் அருகில் வந்தால். நமக்குப் பிடித்தமான தின் பண்டம் தயாராகும்பொழுது நம்முடைய நாக்கும் வேர்க்கிறது!

பகலில் மனிதர்களை முக ஜாடையைக் கொண்டு அறிந்து கொள்கிறோம். இருட் டில் முக ஜாடையைக் கவனிக்க இயலாத பொழுது, நாக்குதான் நம் உதவிக்கு வருகிறது. பேசும் குரல் நமக்கு இருட்டில் வந்துள்ள ஆசாமி யார் என்பதை வெளிப் படுத்துகிறது. பிரம்ம சிருஷ்டியைவிட, நாமகளின் சிருஷ்டியாகிய குரல் அதிக நுட்பமுடையதல்லவா?

'நித்யத்வம்' கேட்க வாயெடுத்த கும்ப கர்ணனை 'நித்ரத்வம்' கேட்கும்படி சதி செய்ததும் இந்த நாக்குதான். ஒன்றை நினைத்து வேறொன்றை உளறிக் கொட்டும் வழக்கம் நம்மில் எத்தனை பேருக்கு இல்லை? அதைவிட ஒன்றுமே பேச முடியா மல் நாக்கு மேல் அண்ணத்தில் ஒட்டிக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்வதே ஒரு விதத்தில் மேல் அல்லவா?


"உணர்ச்சியின் பெருக்கினால் பிரசங் கிக்கு நாக்கு எழவில்லை, நா தழுதழுத்தது" என்றெல்லாம் விமரிசனம் செய்யப்படும் பிரசங்கிக்கு, உண்மையில் பேசவே தெரியா மலும் இருக்கலாம் அல்லவா?

நாக்கு அரசியல் வாதியின் ஆயுதம், மனிதன் மனத்துக்குக் கண்ணாடி, அவன் உண்ணும் ஆகாரத்துக்கு வழி காட்டி, அவன் எழுதும் கடி தத்தை ஒட்ட உபயோகப்படும் பசை!

அத்தகைய நாக்கின் பெரு மையை ஆயிரம் நாக்குகள் படைத்த ஆதிசேஷனாலும் சொல்ல முடியாதென்றால்...... மிகுதி வாக்கியத்தை நேயர் களே முடித்துக் கொள்ளவும்.




நந்தேச சீதோஷ்ண ஸ்திதிக்கேற்க செய்யப்பட்ட



பில்கோ ரேடியோ

சாதாரண கிராமபோன் விலையில்

இப்போது உங்களுக்குக் கிடைக்கும்.

ரூ. 385

அழகிய ப்ளாஸ்டிக் பெட்டி

உங்களுக்கு இஷ்டமான ஸ்டேஷன்களைக் கேட்கலாம்

விவரங்களுக்கு எழுதுங்கள்: சென்னை மாகாண, சமஸ்தான விநியோகஸ்தர்கள்

மகமத் இப்ருஹிம் அண்ட் கோ

"விஜய மாளிகை" 7-8, மவுண்ட் ரோடு, மதராஸ்-2



நாள் முழுவதும் குதூகலம்தான்!

நியதியின்படி - காலையிலிருந்து இரவுவரை-எக் கவலையுமில்லாமல் உத்ஸாகத்துடன் இருக்கலாம். ஆனால் - குடல் சரிவர சுத்தம் செய்யப்படா விட்டால், வெறுப்பும், கடு கடுப்பும் ஏற்படுவது இயற்கையே. ஆகையால், உடலின் இயற்கை நியதிகளைப் பாதுகாக்கும் பொருட்டு, புத்திசாலிகளான எல்லா தாய்மார்களும் தங்கள் குழந்தைகளுக்கு காலாகாலத்தில் இந்த மருதுவான போனோமின்டை கொடுப்பார்கள்.

சுத்தமாக மலமிளக்கும் உன்னத சஞ்சீவி

ரூ. 1-2-0 ரூ. 0-7-0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்.

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜெண்டுகள்:

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 89-A, அரமனைக்காரத் தெரு, சென்னை

BONOMINT
LAXATIVE
CHEWING GUM

# ராணிக்குத் தெரியுமா?

விஜயம்

ஓர் ஊரில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு பிள்ளை இருந்தான். அந்த ராஜ குமாரன் மிகவும் அழகா யிருப்பான். ராணிக்குத் தன் பிள்ளையிடம் அளவு கடந்த பிரியம். அவனை ரொம்பவும் செல்வமாக வளர்த்து வந்தாள்.

ராஜ குமாரனுக்கு வயது இருபதாயிற்று. நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு பல தேசத்து அரசர்கள் அவனுக்குப் பெண் கொடுக்க முன் வந்தனர். மிகவும் அழகாகவும் வீரனாகவும் இருக்கும் ராஜ குமாரனுக்கு யார்தான் பெண் கொடுக்க ஆசைப்பட மாட்டார்கள்?

ஆனால், ராணி எந்தத் தேசத்து அரசனுடைய பெண்ணா யிருந்தாலும் அவளிடம் ஒரு குற்றங் கண்டுபிடித்து அவளைத் தள்ளி வந்தாள். இப்படி எத்தனையோ பெரிய பெரிய அரசர்களின் பெண்களை யெல்லாம் ராணி குற்றங் குறை கூறி வந்ததனால் ராஜ குமாரனுக்குப் பெண் கொடுக்க எந்த ராஜாவும் முன் வரவில்லை.



"தேவீ, நீ இப்படி ஊரிலுள்ள ராஜ குமாரிகளை யெல்லாம் குற்றங் கூறி வந்தால் அப்புறம் கல்யாண விஷயமாய் இனிமேல் எந்த ராஜாவும் நம்மை நெருங்க மாட்டான். எதற்காக நீ இப்படி எந்தப் பெண்ணைக் கண்டாலும் குற்றங் கூறுகிறாய்?" என்று அரசன் ஒரு நாள் ராணியைக் கேட்டான்.

அதற்கு ராணி, "மஹாராஜா, நான் என்ன செய்யட்டும்? நம் பிள்ளைக்கு வருகிற பெண்களெல்லாம் உண்மையில் ராஜ குலத்தைச் சேர்ந்த பெண்கள் இல்லை. அக்கிரமத்தினாலும் சூழ்ச்சியினாலும் பிறருக்குச் சொந்தமான ராஜ்யத்தைப் பிடித்துக் கொண்டு இவர்கள் ராஜா வேஷம் போடுகிறவர்கள். இந்த வேஷக்காரர்களின் பெண்கள் நமது பிள்ளைக்கு வேண்டாம். உண்மை ராஜகுமாரி தான் வேண்டும். நடை உடை பாவனையிலிருந்தே அவர்கள் ராஜ குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று எனக்குத் தெரிந்து விடுகிறது! அதனால்தான் ஏதாவது காரணங்கூறி அவர்களைத் தள்ளிவிடுகிறேன்!" என்றாள்.

"இப்படி யிருந்தால் அப்புறம் நமது பிள்ளைக்குக் கல்யாணமே ஆகாது!" என்றான் அரசன்.

"அப்படிச் சொல்லாதீர்கள். அவனுக்கு என்று ஒரு பெண் எங்கேயாவது பிறந்துதான் இருப்பாள்!" என்றாள் ராணி.

உண்மையில் இந்தக் கல்யாண விஷயமாக ரொம்பவும் மன வருத்தத்துடன் இருந்தவன் ராஜகுமாரன் தான். ஏனென்றால் அவன் ஒரு அழகான ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று ரொம்பவும் ஆசையுட னிருந்தான். அந்த ராஜகுமாரியிடமும் ராணி ஏதாவது குற்றங் கண்டு பிடித்து விட்டால் என்ன செய்வது என்பதுதான் அவன் கவலை.

ஒரு நாள் இரவு இடியும் மின்னலுமாக மழை பிரமாதமாகப் பெய்தது. அப்பொழுது அரண்மனை அந்தப்புரத்துக் கதவை யாரோ தடதடவென்று இடிக்கும் சத்தம் கேட்டது. ராணி வேலைக்காரியை அனுப்பிக் கதவைத் திறக்கச் செய்தாள். கதவு திறந்ததும், மழையில் நனைந்து குளிர் வெட வெட வென்று நடுக்க ஒரு அழகிய பெண் உள்ளே நுழைந்தாள். ராணிக்கு அவளைப் பார்த்ததும் பரிதாபமா யிருந்தது. அந்தப் பெண்ணுக்கு வேறு புதிய உடைகள் கொடுத்து உபசரித்தாள்.

"நீ யாரம்மா? இந்த மழையில் எங்கே புறப்பட்டாய்?" என்று கேட்டாள் ராணி.

"நான் பக்கத்துத் தேசத்து ராஜாவின் பெண். வேட்டையாட வந்த என் தந்தையுடன் நானும் வந்தேன். வன விநோதங்களைப் பார்த்துக் கொண்டே நான் என் தந்தையை விட்டுப் பிரிந்து விட்டேன். மழை பிரமாதமாக வந்து விட்டது. கடைசியில் இந்த அரண்மனை விளக்கின் ஒளியைப் பிடித்துக்கொண்டு இங்கே வந்து சேர்ந்தேன்!" என்றாள் அந்தப் பெண்.

"அப்படியா? நாளைக் காலை உன்னை உன் அப்பாவிடம் பத்திரமாகச் சேர்க்கச் சொல்கிறேன். இப்பொழுது போய்ப் படுத்துக் கொள்!" என்று கூறினாள் ராணி.

மறு நாள் காலையில் ராணி அந்தப் பெண்ணைப் பார்த்து, "நேற்று இரவு நன்றாய்த் தூங்கினாயா?" என்று கேட்டாள்.

"எனக்குத் தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தேன். காரணம் படுக்கையில் ஏதோ ஒன்று இருந்து கொண்டு உறுத்தியதுதான். அந்தப் படுக்கையில் அப்படி என்னதான் இருந்ததோ தெரியவில்லை. உடம்பெல்லாம் வலிக்கிறது!" என்றாள் அந்தப் பெண்.


ராணிக்கு இதைக் கேட்டதும் சந்தோஷம் தாங்கவில்லை. "நீதான் பரம்பரையாக வந்த ராஜகுடும்பத்துப் பெண். நான் உனக்காகத் தயார் செய்த படுக்கையின் மெத்தைகளுக்கு அடியில் ஒரு சின்ன அவரைக்காயை வைக்கச் சொன்னேன். நாலைந்து மெத்தைகளுக்கு அடியில் வைக்கப்பட்ட அந்த அவரைக் காய் உன் உடம்பை உறுத்தி யிருக்கிறதே! இவ்வளவு சொகுசான நித்திரை உண்மை ராஜகுமாரிக்குத்தான் இருக்கும். நீதான் என் பிள்ளைக்கு ஏற்றவள்!" என்று ராணி மகிழ்ச்சி தாங்காமல் கூறினாள்.



பிறகு கல்யாணம் தடபுடலாய் நடந்தது. ராஜகுமாரனுக்கும் சந் சந்தோஷம்தான். அவன் மனமாரக் காதலித்த பெண்ணையே கல்யாணம் செய்து கொள்ளுவதில் அவனுக்குச் சந்தோஷமா யிருக்காதா?

ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் ராஜகுமாரனும் ராஜகுமாரியும் ரகசியமாகவே வைத்துக் கொண்டிருந்தனர். அதுதான் அந்த அவரைக் காய் விஷயம். ராணி, ராஜகுமாரியின் படுக்கைக்கு அடியில் அவரைக் காய் வைத்ததை ராஜகுமாரன் வேலைக்காரர்கள் மூலம் அறிந்து கொண்டு ராஜகுமாரிக்குத் தெரிவித்து விட்டான். ஆனால் இது ராணிக்குத் தெரியுமா?

# ஒரு கடிதம்



**எஸ். வி. எஸ்.**

என் அருமை செங்கமலர்,

"உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாம்!

என்ற அற்புதமான பாரதியாரின் வரிகளுக்குப் பொருள் எனக்கு இப்பொழுது தான் புரிந்தது. உன் கணவரின் மதுவிலக்குப் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு தான் தெளிவாயிற்று......!" என்றெல்லாம் நீ எழுதியிருந்தாய். அதைப் படித்தபோது எனக்கு ஏதேதோ பலவித உணர்ச்சிகள் மனதில் அலை பாய்ந்தன. சந்தோஷகரமான உணர்ச்சிகளா, அன்றி வருத்தத்தை அளிக்கும் உணர்ச்சிகளா என்பதொன்றும் புரியவில்லை. ஆனால் கண்கள் மட்டும் கண்ணீர் பொழிந்து கொண்டிருந்தன. கொஞ்ச நாழிகைக்குப் பிறகு மனசு பழைய சம்பவங்களில் ஈடுபட்டது.

என் கணவர் பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; படிப்பும் நிறைந்தவர். மறக்குலத் தேவமாரில் எங்கள் குடும்பந் தான் பெயரும் புகழும் பெற்ற குடும்பம் என்பது உனக்குத் தெரியும். பணமும் படிப்பும் இருந்து என்ன பிரயோஜனம்?

அன்றிரவு அவருடைய அறைக்குச் சென்றபோது, கட்டிலில் அவர் படுத்திருந்தார். இவ்வளவு சீக்கிரம் அவர் என்றுமே படுத்துக் கொண்டது கிடையாது. ஆதலால் அவரைப் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது. இருந்தாலும் களைப்பினால் அவர் அவ்வளவு சீக்கிரம் படுத்துக் கொண்டிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டேன். ஆனாலும் அவர் ஒவ்வொரு நாளும் இராத்திரி பால் சாப்பிட்டுவிட்டுத் தான் படுத்துக் கொள்ளுவார். அந்த வழக்கப்படி அவரை எழுப்ப முயன்றேன். அப்பொழுது அவர் மேனியைத் தொட்ட பொழுது, ஒரு நெருப்புக் கங்கைத் தொட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது — உடம்பு அப்படி ஜுரத்தினால் கொதித்துக் கொண்டிருந்தது. நான் எழுப்பியவுடன் அவர் எழுந்திருந்து படுக்கையில் உட்கார்ந்தார்.

"என்ன?" என்று நாக்குழறக் கேட்டார். வாயிலிருந்து ஏதோ ஒரு வாசனையும் வந்தது! எனக்கு அப்போது இதற்குக் காரணம் என்ன வென்று தெரியவில்லை!

இப்படி வெகு நாட்கள் நடக்க வில்லை. வெகு சீக்கிரத்திலேயே அவருடைய ரகசியம் புலப்பட்டு விட்டது. அவருக்கு ஜுரம் வருவதற்கும், நாக்குழறுவதற்கும், என்னைக் கண்டு திடுக்கிடுவதற்கும் காரணம் புலப்பட்டு விட்டது.

ஒரு நாள் அவர் வெளியே போய் விட்டு வீட்டுக்குள் நுழையும்போது அவர் பின்னாலேயே சென்றேன். அவர் தம் அறைக்குச் சென்றதும் தம்முடைய சட்டைப் பைக்குள் ளிருந்து ஒரு பெரிய புட்டியை எடுத்து ஒளித்து வைக்க முயன்று கொண்டிருந்தார். அதைப் பார்த்தவுடனேயே என் உடம்பெல்லாம் ஒருதரம் வியர்த்துவிட்டது. பின்னர் நடுங்க ஆரம்பித்து விட்டது. "ஆ! இதென்ன புட்டி? சாராய புட்டியா! மாமாவுக்குத் தெரிந்தால்......" என்று வாய் திறந்து சொல்லிக் கொண்டிருந்தபோது, அவர் ஓடிவந்து என் வாயைப் பொத்தினார். "ஏ, மூதேவி! உன்னை யார் இங்கே வரச் சொன்னது?" என்று ஓங்கி என் கன்னத்தில் அறைந்தும் விட்டார். நான் மூர்ச்சையுற்று விழுந்தேன்.

பிரக்ஞை தெளிந்து எழுந்தபோது, என் வியப்புக்கு அளவே யில்லை. என்னை அடித்த கை அணைத்து ஆசுவாசப் படுத்திக் கொண்டிருந்தது!

"சண்பகம்! உனக்கு நல்ல அடியா? கோபத்தில் மூர்க்கத்தனமாக உன்னை அடித்து விட்டேன்!" என்று இரங்கினார். அது மன்னிப்புக் கோரும் பாவனையிலிருந்ததைப் பார்க்க வருத்தமாக இருந்தது.

"நீங்கள் என்னை அடித்தால் நான் படக் கூடாதா? என் உடம்பு கரைந்து விடுமா? ஆனால் உங்களுக்கு இந்தக் கெட்ட பழக்கம் வந்து சேர்ந்ததே, அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது!" என்றேன்.

"சண்பகம்! உன் ஆணை! இனிமேல் நான் குடிப்பதில்லை! ஆனால் எனக்கு இந்தப் பழக்கமிருந்ததாக உன்னைத் தவிர வேறு யாருக்குமே தெரியக்கூடாது! அதுவும் மாமாவுக்குத் தெரியக் கூடாது! இது தான் நான் உன்னைக் கேட்டுக்கொள்வது, சண்பகம்!" என்றார் கனிவுடன்.

"நீங்கள் என்னைக் கேட்டுக் கொள்ள வேண்டுமா? யாருக்கும் சொல்லக்கூடாது என்று நீங்கள் உத்தரவிட்டால் நான் அதை மீறுவேனா?"

பிறகு, கொஞ்சநாள் குடிக்காமல், வெகு தீவிரமாக அவர் என்னவெல்லாமோ எழுதி எழுதித் தள்ளிக் கொண்டிருந்தார். கடைசியில் ஒரு நாள் அவருக்கு என்ன தோன்றியதோ, தெரியவில்லை. தாம் எழுதியவற்றை யெல்லாம் கிழித்துக் கிழித்துச் சுக்கு நூறாக எறிந்தார்; தலையைப் பிய்த்துக் கொண்டார்; வெளியே சென்றார்; இரவுதான் திரும்பி வந்தார். வரும்போது கால் தள்ளாடியது. மேனி கொதித்தது. குடித்து விட்டு வந்திருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன்.

அன்று அவரை நான் ஒன்றும் கேட்கவில்லை. மறுநாள் விடிந்த பிறகுதான் அவர் சித்தம் ஸ்வாதீனத்துக்கு வந்தது. "இனி குடிப்பதில்லை என்றீர்களே, ஏன் நேற்றுக் குடித்தீர்கள்?" என்றேன்.

அவருக்குக் கோபம் வந்து விட்டது.

"நேற்று மட்டுமா குடித்தேன்? இன்றைக்கும் குடிப்பேன், நாளைக்கும் குடிப்பேன், இனிமேல் என்றென்றைக்கும் குடிப்பேன்!" என்று ஆத்திரத்துடன் கூறினார்.

"அப்படியானால் நான் மாமாவிடம் சொல்லட்டுமா?" என்றேன் — ஏதோ நான் பயமுறுத்திக் கட்டுப் படுத்துவதாக நினைத்துக்கொண்டு.

ஆம்; வாஸ்தவம். நான் அவ்விதம் கூறியதும் அவர் முகம் மாறத்தான் செய்தது. எல்லையில்லாத துயரம் அவர் முகத்தில் படர்ந்தது. தலையைக் கவிழ்த்துக் கொண்டு அடிமேல் அடி வைத்துத் தாங்க முடியாத் துயரத்துடன் வெளியேறினார்.

அவ்வளவுதான், அன்றெல்லாம் அவர் வரவில்லை; அதற்கு அடுத்த நாளும் வரவில்லை; நாட்கள் மாதங்களாயின; மாதங்கள் வருஷங்களாயின. அவர் வரவேயில்லை!

இந்தக் காலத்தில் என் மாமனார் பட்ட வேதனை இவ்வளவு அவ்வளவு அல்ல; அவருடைய தாயார் பட்ட வியாகூலத்தையோ சொல்லி முடியாது. அவர்கள் என்னை அடிக்கடி "அவன் எங்கே போனான்? எதற்குப் போனான்? உன்னிடம் சொல்லிவிட்டுப் போனானா?" என்றெல்லாம் கேட்பார்கள். உண்மையைச் சொல்லி விடுவோமா என்று நான் ஆயிரம் தடவை எண்ணியதுண்டு. ஆனால் கடைசி வரையில் சொல்லவே யில்லை.

உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியுமா? அவருக்குக் குடிப் பழக்கம் உண்டென்றும், அவர் குடித்து விட்டுச் சென்னை நகரத்தி லெல்லாம் சீரலைகிற தாகவும் பலர் தகவல் தெரிவித்தார்கள். நான் மட்டும், "அப்படி யிருக்கவே இருக்காது! அவருக்காவது, குடிப் பழக்கம் ஏற்படவாவது!" என்று வாதித்து வந்தேன். அந்தக் கிழப் பெற்றோர்களின் இதயம் இடிந்து போகாமலிருக்கும் பொருட்டே, அவருடைய அறிவைப் பற்றியும், அவர் குணத்தைப் பற்றியும் புகழ்ந்து, உண்மையை என்னாலியன்றவரை மறைத்து வந்தேன்!

அடி, செங்கமலம்! அவர் இந்த அஞ்ஞாத வாசத்தில் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்ச மல்லவாம்! கையில் குடிக்கப் பணமில்லாமல் ஒரு சமயம் திருடினாராம்! ஒரு சமயம் குடித்துவிட்டு எங்கோ குப்பை மேட்டில் விழுந்து கிடந்தாராம்! ஒரு முறை குடித்துவிட்டுத் தள்ளாடி தள்ளாடி நடந்து வந்தபோது, அவரைப் பைத்தியம் என்று கருதிப் போலீஸார் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்தார்களாம்! அப்பப்பா! எத்தனை விதக் கஷ்டங்கள்!

வெகு காலத்துக்குப் பிறகு, திடீரென்று ஒரு நாள் அவருடைய அறையில் தட தட வென்ற சத்தம் கேட்டது. யார் என்று பார்க்க நான் அங்கே ஓடினேன். தாடி வளர்த்த மனுஷர் ஒருவர் அங்கே இருந்தார். எனக்குப் பயமுண்டாகி விட்டது. "திருடன்!" என்று வாயைத் திறந்து கத்த எத்தனித்தேன். "சண்பகம், என்னைத் தெரியவில்லையா?" என்றார்.

குரலிலிருந்து அவர்தான் என்பதைக் கண்டு பிடித்து விட்டேன்! அப்படியே பிரமித்துப் போய் நின்று விட்டேன்!

அடுத்த கணம், "சண்பகம், நீ இந்த இடத்தை விட்டுப்போய்விடு!" என்றார்.

"ஏன்?"

"ஆம், அப்படித்தான்! போ என்றால் போ!" என்று மிரட்டினார்.

எனக்குப் பயமாகப் போய் விட்டது. அறையை விட்டு வெளியேறி விட்டேன். நான் அறையை விட்டு வெளியே வந்ததும் அவர் கதவைத் தாழ்ப்பாளிட்டுக் கொண்டார். நான் அவர் தம் அறையில் என்ன செய்கிறார் என்று சாவித் துவாரம் வழியாகப் பார்த்தேன். தம் சட்டைப் பையிலிருந்து, அவர் ஒரு சாராயப் புட்டியை எடுத்தார். அடுத்த நிமிஷம் அவர் தம் இடுப்பிலிருந்து பளபளவென்று மின்னும் பிச்சுவா கத்தி யொன்றையும் எடுத்து மேஜைமேல் வைத்தார். சற்று நேரம் அப்புறம் இப்புறமாக உலவினார். "சாந்தி, அமைதி!" என்றார். "ஆம், அதுவே வழி!" என்றார். அடுத்த கணம் மேஜையருகில் சென்று கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டார்.

என் குலை நடுங்க ஆரம்பித்தது. நல்ல வேளையாகக் கதவின் மேல் தாழ்ப்பாள் போட அப்போது அவர் மறந்து விட்டதால் எனக்குக் கதவைத் திறக்க முடிந்தது. அவர் கையில் கத்தியை வைத்துக்கொண்டு இன்னும் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தார்.

"இதில் யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. கத்தி வேண்டாம்; குடியே தேவலை!" என்று சொல்லிக்கொண்டு, நான் வேறொரு மேஜை மீதிருந்த சாராயப் புட்டியை எடுத்து அவரிடம் கொடுத்தேன்!

முதலில் அவர் திடுக்கிட்டார். "நம் பிரச்னையை எப்படித் தெரிந்து கொண்டாள் இவள்!" என்று பிரமித்தார்.

"'குடி கெட்ட பழக்கம்; அதை நிறுத்தத்தான் வேண்டும்' என்று ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் நீங்களே உணரலாம். உணர்ந்து நிறுத்தி விடலாம்! அதற்காக உயிரை மாய்த்துக் கொள்வதா? வேண்டாம், குடியுங்கள்!" என்று நான் மிக்க அமைதியுடன் கூறினேன். அவர் அப்படியே அசைவற்று நின்றார்.

"ஊம்...... குடியுங்கள்! ஏன் யோசிக்கிறீர்கள்?" என்றேன்.

"சண்பகம், ஏன் இப்படி என்னை வதைக்கிறாய்? குடிக்கக் கூடாது என்று தடுத்த கையே எனக்கு ஊட்ட வரும் போது எனக்குக் குடி குடியாக இல்லை; பாஷாணமாக இருக்கிறது; ஆலகால விஷமாக இருக்கிறது! இனி நான் குடிக்க மாட்டேன்; குடிக்கவே மாட்டேன்!" என்று அவர் ஆவேசமாக மொழிந்தார்.

இதைக் கேட்டு அன்று நான் அடைந்த ஆனந்தம் கொஞ்சநஞ்சமல்ல. "ஆமாம், இனி நீங்கள் குடிக்கவேண்டாம். காங்கிரஸ் தொண்டர்கள் புரிந்து வரும் மதுவிலக்குப் பிரசாரத்தில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள். அப்படிச் செய்வது இத்தனை நாளும் நீங்கள் குடித்ததற்குப் பிராயச்சித்தமாகவு மிருக்கும்; மனசுக்கு அமைதியும் கிட்டும்" என்றேன்.

இப்படி ஆரம்பமாயிற்று அவர் அரசியல் வாழ்க்கை! போதும், கடிதம் நீண்டு விட்டது.

உன் அன்புள்ள,
சண்பகம்."






Copyright. Pond's Extract Co.








# சந்திர ஹாரம்

ஆசிரியர் : பிரேம்சந்த்] [மொழிபெயர்ப்பு : ரா. வீழிநாதன்

ரமாநாத் நள்ளிரவு வரையில் சதுரங்கப் படத்தைத் தன் எதிரில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். இதைவிட எத்தனையோ பெரிய பெரிய ஆட்டங்களுக்கெல்லாம் அவன் விடை கண்டு பிடித்திருக்கிறுன். அந்த விடைகள் எல்லாம் அவனுடைய கண் எதிரிலேயே நின்றன. ஆனால் இந்தப் படத்தைப் பொறுத்த வரையில் அவனுக்கு ஒரு ஞாபகமும் வரவில்லை.

இப்படி உட்கார்ந்திருந்த அவனுக்குச் சட்டென்று மின்னொளி போன்ற பிரகாசம் உண்டாயிற்று. மறந்து போயிருந்த விஷயம் திடீரென்று ஞாபகத்துக்கு வந்தது ...... ஆமாம், இந்தப் படத்தை ராஜா சாஹேப் தான் அவனுக்குக் கொடுத்தாரோ? ஆமாம், அவரேதான் கொடுத்தார். மூன்று நாட்கள் இரவு பகலாக மூளையைப் போட்டு உடைத்துக் கொண்டல்லவா அவன் இதற்கு விடை கண்டு பிடித்தான்! விடைக்குக்கூட அவன் நகல் எடுத்து வைத்திருந்தானே! உடனே அவனுக்கு ஒவ்வொரு காயையும் எப்படி நகர்த்தி ஆடவேண்டும் என்பதும் நினைவுக்கு வந்து விட்டது. அடே! ஒரே கொடியில் அல்லவா விடை கண்டு பிடித்து விட்டான்! அவனுக்கு 'விடை கண்டு பிடித்து விட்டோம்' என்ற மகிழ்ச்சியில் தலைகால் தெரியவில்லை; கூத்தாடக்கூட ஆரம்பித்து விட்டான். மாதம் ஒரு படம் இது மாதிரிக் கிடைத்து விட்டால் கேட்பானேன்? அப்புறம் அவனைக் கட்டிப் பிடிக்க முடியுமா?

தேவீதீன் விடியற் காலையில் எழுந்து குப்பைகளைக் கொளுத்திப் போட்டுக் குளிர் காய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தான். ரமாநாத் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாட அவனருகே சென்று, "இங்கே 'பிரஜா மித்திரன்' பத்திரிகைக் காரியாலயம் எங்கே யிருக்கிறது? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாத பத்திரிகை ஆபீஸ் இந்த ஊரிலே என்ன இருக்கிறது? எனக்கு அதன் ஆசிரியரைக்கூடத் தெரியுமே! அவர் குஷாலான பேர்வழி. எப்பொழுது பார்த்தாலும் வெற்றிலையும் வாயுமாக இருப்பார். நல்ல துணிச்சல் ஆசாமி; இரண்டு தரம் ஜெயிலுக்குக்கூடப் போயிருக்கிறார்" என்றான் தேவீதீன்.

"இன்றைக்குச் சற்று அந்த ஆபீஸ் வரைக்கும் போய் விட்டு வருகிறாயா?"

தேவீதீன் பயந்த குரலில், "என்னையா போகச் சொல்லுகிறாய்? என்னால் முடியாது அப்பா!" என்றான்.

"ஏன்? அந்த ஆபீஸ் ரொம்ப தூரத்தில் இருக்கிறதோ?"

"இல்லை, தூரத்தில் இல்லை......"

"பின்னே என்ன?"

தேவீதீன் குற்றவாளியைப் போலத் 'திரு திரு' வென்று விழித்துக் கொண்டு, "இல்லை, அதற்குச் சொல்லவில்லை. கிழவி கோபித்துக் கொள்ளுகிறாள். இந்தச் சுதேசி — விதேசிச் சண்டையில் இனிமேல் கலந்து கொள்ளுவதில்லை யென்றும், பத்திரிகை ஆபீஸ்கள் பக்கமே போவதில்லை என்றும் அவளுக்கு வாக்களித்திருக்கிறேன். அவள் சொல்லைக் கேட்டுத்தானே ஆகவேண்டும்!" என்றான்.

ரமாநாத் இலேசாகச் சிரித்துக் கொண்டு, "உன் வேடிக்கை யெல்லாம் அப்புறம் ஆகட்டும். எனக்கு ரொம்ப முக்கியமான ஒரு வேலை இருக்கிறது. அந்தப் பத்திரிகையில் சதுரங்கப் படம் ஒன்று வெளியாகி யிருந்தது. அதற்கு விடை கண்டு பிடித்துச் சொல்லுவோருக்கு ஐம்பது ரூபாய் வெகுமதி தருகிறார்களாம். நான் விடை கண்டுபிடித்து விட்டேன். இன்றைக்கே அந்த விடை பிரசுரிக்கப் பட்டால், எனக்கு அந்த வெகுமதி கிடைத்து விடலாம். பத்திரிகை ஆபீஸ்களில் அடிக்கடி ரகசியப் போலீஸ்காரர்கள் சுற்றுவார்கள். அதனால்தான் யோசிக்கிறேன். இல்லாவிட்டால் நானே போய் விடுவேன். நீ போக முடியாது என்று சொல்லி விட்டால், கடைசியில் நானே தான் போயாக வேண்டும். இரவு பூராவும் கண் விழித்து, வெகு சிரமப்பட்டு இதற்கு விடை கண்டு பிடித்திருக்கிறேனாக்கும்!" என்றான்.

தேவீதீன் கவலை தோய்ந்த குரலில், "என்ன இருந்தாலும், நீ அங்கே போவது உசிதம் இல்லை" என்றான்.

"அப்படியானால் என்ன செய்வது! தபாலில் அனுப்பி விடட்டுமா?"

தேவீதீன் ஒரு கணம் யோசனை செய்த பின்பு, "தபாலில் எப்படி அனுப்புவது? உன் கடிதம் போய்ச் சேரவில்லை யென்றால் உன் பிரயாசை யெல்லாம் வீண்தானே! ரிஜிஸ்தர் செய்து அனுப்புவதென்றாலும் நாளை மறுநாள்தான் போய்ச் சேரும். ஏனென்றால், நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை அல்லவா? நாளைக்குள் வேறு யாராவது விடையை அனுப்பி வெகுமதியை அடித்துக் கொண்டு போய் விட்டால்...? இல்லை, பத்திரிகை ஆபீஸ்காரர்களே மோசக் கருத்துடன் உன் விடையைத் தங்கள் பெயரில் வெளியிட்டுக் கொண்டு பணத்தை அமுக்கி விட்டால்...?" என்று தன் சந்தேகங்களைக் கிளப்பினான்.

ரமாநாத் சிந்தனையில் உழன்ற வண்ணம், "அப்படியானால் நானே போய் விடட்டுமா?" என்றான்.

"நீ போகவே கூடாது. போன இடத்தில் நீ போலீஸ்காரர்கள் கையில் மாட்டிக் கொண்டு விட்டால்......?"

"இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் மாட்டிக்கொண்டு தானே ஆகவேண்டும்? எவ்வளவு நாட்கள் தான் இப்படி ஒளிந்து திரிய முடியும்?"

"அதற்காகச் சாவதற்கு முன்பே அடித்துக் கொண்டு அழுவாருண்டா? மாட்டிக் கொண்டு விட்டால் அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். இங்கே கொண்டு வா, நான் போய்விட்டு வருகிறேன். கிழவி கேட்டால் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி விடுவோம். இப்பொழுதே போனால் அவரைப் பார்த்து விடலாம். ஆபீஸிலேயே தான் அவர் குடியிருக்கிறார். இன்னும் கொஞ்சம் நேரம் கழித்துப் போனால் எங்கேயாவது வெளியே போனாலும் போய் விடுவார். அப்புறம் பத்து மணிக்கு மேல் அவரைப் பார்க்கவே முடியாது."

"பத்து மணிக்கு மேல்தான் போயேன். இப்பொழுதே என்ன அவசரம்?" என்றான் ரமாநாத்.

தேவீதீன் எழுந்த வண்ணம், "ஏதாவது வேறு வேலை கீலை வந்து விட்டால் அப்புறம் இன்றைக்குப் போக முடியாமலே போனாலும் போய்விடும். கிழவியும் வீட்டில் இல்லை. அவள் காய் கறி வாங்கிக் கொண்டு திரும்புவதற்கு இன்னும் நேரமாகும். அவள் வருவதற்குள் நான் வந்து விடுவேன்" என்றான்.

பிறகு தேவீதீன் தன் கறுப்புக் கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டு, ரமாநாத்தினிட மிருந்து கடிதத்தை வாங்கிக் கொண்டு, "பிரஜாமித்திரன்" ஆபீஸை நோக்கிப் புறப்பட்டான்.

கிழவி காய்கறி வாங்குவதற்காக மார்க்கெட்டுக்குப் போயிருந்தாள். அரை மணி நேரத்துக்கெல்லாம் அவள் தன் தலையில் ஒரு சின்னக் கூடையையும், ஒரு கூலியாளின் தலையில் பெரிய கூடை ஒன்றையும் வைத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். அவளுடைய உடல் முழுவதும் வியர்வையினால் நனைந்திருந்தது. அவள் வாசற்படியில் வந்து நின்று கொண்டு, "எங்கே போய் விட்டீர்கள்? சற்றுச் சீக்கிரம் வந்து இந்தக் கூடையை இறக்குங்கள். சுமை தாங்க முடிய வில்லை" என்று கூப்பிட்டாள்.

ரமாநாத் ஓடி வந்து கூடையை இறக்கி வைத்தான்.

கிழவி அவனைப் பார்த்து, "அவர் எங்கே போய் விட்டார்?" என்று கேட்டாள்.

"எனக்குத் தெரியாது. இப்பொழுது தான் இந்தப் பக்கமாக எங்கேயோ போனார்!" என்று ஒன்றும் தெரியாதவன் போல ரமாநாத் பதில் சொன்னான்.



கிழவி கூலியின் தலையிலிருந்த கூடையை இறக்கி வைத்து விட்டு, அங்கே கிடந்த ஒரு ஒடிந்த விசிறியை எடுத்து விசிறிக் கொண்டே, "எங்கேயாவது கஞ்சாக் குடிக்கப் போயிருப்பார். வேறென்ன? நான் உயிரைக் கொடுத்து நாலு காசு சம்பாதிப்பதும் அதை அவர் குடித்துக் கரியாக்குவதுமாகத்தா னிருக்கிறது பிழைப்பு!" என்று சொல்லிக் கொண்டே கீழே உட்கார்ந்தாள்.

தேவீதீன் லாகிரி வஸ்துக்கள் உபயோகிப்பது, ரமாநாத்துக்குத் தெரியாத விஷயம் அல்ல. இருந்தாலும் கிழவியைச் சாந்தப்படுத்தும் நோக்கத்துடன், ஒன்றும் தெரியாதவனைப்போல, "அவருக்கு இந்தக் கெட்ட பழக்கம் எல்லாம்கூட உண்டா? நான் இதுவரை பார்த்ததில்லையே!" என்றான்.

கிழவி முதுகுப் புறமிருந்த புடவைத் துணியை நகர்த்தி, விசிறிக் காம்பால் முதுகைச் சொரிந்து கொடுத்துக் கொண்டே, "அவரிடம் இல்லாத கெட்ட பழக்கம் இந்த உலகத்தில் ஒன்றுகூடக் கிடையாது. சாராயம், கஞ்சா, பதனி, கள் எல்லாம் அவர் சாப்பிடுவது உண்டு. நான் இன்று வரை அவர் அபினி சாப்பிட்டுப் பார்த்ததில்லையே தவிர, பாக்கி எல்லாம் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். அதுவும் சாப்பிடுகிறாரோ, என்னவோ? கடவுளுக்குத்தான் தெரியும். நாம் இதையெல்லாம் எப்பொழுது பார்த்தாலும் கவனித்துக் கொண்டேயிருக்க முடிகிறதா, என்ன? போகப் போக என்ன நடக்குமோ? யார் கண்டார்கள்? கையில் நாலு காசு இருந்தால் தான் நாம் இந்த உலகத்தில் மானமாகக் காலம் தள்ள முடியும். இவருக்கு அதைப் பற்றி ஏதாவது கவலை யிருந்தால்தானே? ஊர் சுற்றுவதிலும், கோவில் குளத்திலும், லாகிரி வஸ்துக்களிலும் பணத்தைக் கரியாக அடித்து விடுகிறார். எனக்கு அவரைக் கண்டாலே கரிக்கிறது. கடவுள் எப்பொழுதுதான் என்னை அழைத்துக் கொள்ளப் போகிறாரோ? அப்படி அவர் அழைத்துக் கொண்டு விட்டால் இந்தக் கெட்ட சகவாசத்திலிருந்தாவது நான் தப்பித்துக் கொள்ளலாம் அல்லவா! நான் செத்தால்தான் இவருக்கு நல்ல புத்தி வரும். அப்புறம் இப்படிக் காசைக் கரியாக்க என்னைப்போல யார் இவருக்குச் சம்பாதித்துக் கொட்டப் போகிறார்கள்? அப்பொழுது இவர் ரத்தக் கண்ணீர் வடிக்கவில்லை யென்றால் பாரேன்......!—என் அப்பா கூலி, உனக்கு எவ்வளவு காசு கொடுக்க வேண்டும்?" என்றாள்.

கூலியாள் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டே, "உங்களுக்குத் தெரியாதா அம்மா? சுமையைப் பார்த்துக் காசு கொடுங்கள்" என்றான்.

கிழவி ஈவு இரக்கமற்ற குரலில், "சரி, சரி! இந்தா, இதை எடுத்துக்கொள்ளு. நாளைக் காலையிலே வந்து விடு" என்று சொல்லிக் காசை விட்டெறிந்தாள்.

"அம்மா, ரொம்பக் குறைவாகக் கொடுக்கிறீங்களே! என் வயிற்றுக்கே இது பற்றாதுங்களே!" என்று கூலியாள் கெஞ்சினான்.

கிழவி அவனுக்கு இன்னுமொரு அரையணாவும் கொஞ்சம் உருளைக் கிழங்கும் கொடுத்து அவனை மெதுவாக அனுப்பி வைத்தாள். பிறகு தன் கடையைப் பரப்பினாள். இதன் மத்தியில் அவளுக்கு அன்றையக் கணக்கைப் பார்க்க வேண்டும் என்ற நினைவு எழுந்தது. உடனே அவள் ரமாநாத்தைக் கூப்பிட்டு, "இதோ பார் அப்பா! இன்றையக் கணக்கைக் கொஞ்சம் எழுதேன், பார்ப்போம். மார்க்கெட்டில் இன்றைக்குக் கறிகாய் விலையெல்லாம் யானை விலை, குதிரை விலையாக ஏறிப் போய்க் கிடக்கிறது" என்றாள்.

அன்று வாங்கி வந்த கறிகாய்களை யெல்லாம் தனித் தனியாகக் கூடைகளில் பிரித்து வைத்துக்கொண்டே கிழவி கணக்கையும் சொன்னாள். அன்றைக்கு வாங்கி வந்த ஒவ்வொரு சாமானின் விலையும் அவளுக்கு மனப்பாடமாகி யிருந்தது. ரமாநாத் கணக்கை எழுதி முடித்ததும், ஒரு தடவை அந்தக் கணக்கைப் படிக்கச் சொன்னாள். அப்புறம்தான் அவளுடைய மனதுக்கு நிம்மதி ஏற்பட்டது. அவள் எல்லாக் கறி காய்களையும் சரியாக எடுத்து வைத்துவிட்டு, "என்னைத் தவிர வேறு யாராலும் இவருடன் சேர்ந்து காலம் தள்ள முடியாது. இன்னொருத்தியா யிருந்தால் ஒரு நிமிஷங்கூட இவருடன் குடித்தனம் நடத்தச் சம்மதிக்க மாட்டாள். நானாக இருக்கக் கொண்டுதான் எப்படியோ சமாளிக்கிறேன். நாலு காசைக் கண்களால் பார்ப்பது என்பது லேசுப்பட்ட காரியம் என்று எண்ணுகிறாயா? இரவு பகல் என்று பாராமல், செக்கு மாட்டைப் போல நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட உழைத்தால்தான் கைக்கு நாலு காசு

கிடைக்கிறது. அப்படிப் பிரயாசைப்பட்டு நான் சம்பாதிப்பதை யெல்லாம் ஓசைப் படாமல் எடுத்துக்கொண்டு போய் இவர் கள்ளுக்கடையில் கொண்டுபோய்க் கொட்டி விடுகிறார். எவ்வளவுதான் ஜாக்கிரதையாக நான் ஒளித்து வைத்தாலும் சரி, இவர் கண்களுக்கு அது எப்படியோ தட்டுப்பட்டு விடுகிறது; கொண்டே போய் விடுகிறார். பிள்ளை குட்டிகளோடு ஆனந்தமாக இருக்கத்தான் நான் கொடுத்து வைக்கவில்லை யென்றால், இவருமா இப்படி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளவேண்டும்? வருந்தி வருந்தி அழைத்தாலும் இந்தப் பாழும் சாவு வந்து தொலைந்தால்தானே! என் தலையில் நல்லஎழுத்து எழுதியிருந்தால் இரண்டு பிள்ளைகளும் எதற்காகச் செத்துப் போக வேண்டும்? அது சாகிற வயதா? இந்தக் குடிகாரர் கையில் மாட்டிக் கொண்டு இப்படி யெல்லாம் நான் கஷ்டப் படுவானேன்? இவர் செய்த காரியத்தினால்தான் என் குழந்தைகள் இரண்டும் சுதேசி இயக்கத்தில் கலந்துகொண்டு உயிரை விட்டன. இந்த அறைக்கு வா, காட்டுகிறேன், என் குழந்தைகள் வைத்திருந்த கர்லாக் கட்டையை! ஒரே மூச்சில் அவர்கள் இதை ஐந்நூறு சுற்றுச் சுற்றுவார்களாக்கும்!'' என்றாள்.



அந்த இருட்டு அறைக்குள் நுழைந்த ரமாநாத் ஒரு மூலையில் சாத்தப்பட்டிருந்த இரண்டு கர்லாக் கட்டைகளைப் பார்த்தான். அவை 'வார்னிஷ்' பூசப்பட்டுப் 'பள பள' வென்று சுத்தமாக இருந்தன.

கிழவி பெருமையுடன் அவைகளைப் பார்த்துக் கொண்டே, "சிலர் 'குழந்தைகளின் திதி யன்றைக்கு இவைகளைப் பிராமணர்களுக்குத் தானம் கொடுத்துவிடு. உன் மன வருத்தமும் நீங்கும், உன் பிள்ளைகளின் ஆத்மாவும் சாந்தி யடையும்' என்று சொன்னார்கள். ஆனால் இவற்றைத் தானம் கொடுக்க எனக்கு மனமே வரவில்லை. என் பிள்ளைகள் இவற்றை உயிருக்கு உயிராகப் பாவித்து வந்தனர். ஆகையால் எனக்கு இவற்றைப் பார்த்தாலே என் பிள்ளைகளைக் கண்ட மாதிரி யிருக்கிறது. ஆகவே, நான் 'இவைகள்தான் என்னுடைய பிள்ளைகள். சொந்தப் பிள்ளைகளை யாராவது தானம் கொடுப்பார்களா? என்றால் இவற்றைத் தானம் செய்ய முடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்'' என்றாள்.

கிழவியின் அந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகு ரமாநாத்துக்கு அவள்மீது ஒரு தனி சிரத்தை ஏற்பட்டது. அவளுடைய உள்ளத்தில் அபார வாஞ்சையும், தன்னடக்கமும், கற்பனைக்கும் எட்டாத பொறுமையும் இருப்பதனால் அல்லவா, அவளால் உயிரற்ற ஜடப் பொருள்களான மரக் கட்டைகளுக்குக்கூட உயிர் அளிக்க முடிந்தது! ரமாநாத் இதுவரை அந்தக் கிழவியை 'காசு, காசு' என்று காசுக்காக உயிரை விடும் ஜடப் பொருளாகத்தான் எண்ணி வந்தான். இன்றுதான் அவனுக்குக் கிழவியும் எல்லாரையும் போல ஆசாபாசங்கள், அன்பு, மென்மை முதலிய சகல உணர்ச்சிகளும் உள்ளவள் என்று தெரியவந்தது. கிழவி ரமாநாத்தை உற்றுப் பார்த்தாள். அவளுடைய உள்ளத்தின் ஆழத்தில் இத்தனை நாட்களாகத் தூங்கிக் கொண்டிருந்த தாயன்பு விழித்தெழுந்து ரமாநாத்தைக் கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் என்ற ஆவலை உண்டாக்கியது.

கிழவி ரமாநாத்தைப் பார்த்து அன்பு ததும்ப, "பல் தேய்த்து விட்டாயா, அப்பா? நல்ல ஆரஞ்சுப் பழங்களாக வாங்கி வந்திருக்கிறேன். பல் தேய்த்திருந்தால் ஒன்றையெடுத்துத் தின்று பார்'' என்றாள்.

ரமாநாத் ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்து உரித்த வண்ணம், "இன்று முதல் நான் உன்னை 'அம்மா' என்று கூப்பிடுகிறேனே!'' என்றான்.

இதைக் கேட்டதும், கிழவியின் வறண்ட, ஒளி யிழந்த, கருமிக் கண்களிலிருந்துகூட முத்துக்களைப் போன்ற இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே சொட்டின.

இதே சமயத்தில் தேவீதீன் ஓசைப்படாமல் மெதுவாக அங்கே வந்து நின்றான். கிழவி அவனைப் பார்த்ததும், "பொழுது விடிவதற்குள்ளாக எசமானருக்கு என்ன அவசர ஜோலியோ? எங்கேயோ போய் விட்டு வந்திருக்கிறாப் போலிருக்கிறதே!'' என்று துடுக்காகக் கேட்டாள்.

தேவீதீன் சிரமப்பட்டு முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "எங்கேயும் இல்லை. ஒரு வேலையாகப் போயிருந்தேன்'' என்று ஒரு முழம் நீட்டி முழக்கிக்கொண்டு பதில் சொன்னான்.

"பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்? உங்களைத் தெரியாதவர்களிடத்தில் இந்த மாதிரிப் புளுகினால் நம்பி விடுவார்கள். உங்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கும் என்னிடமா உங்கள் வேலையைக் காட்டுகிறீர்கள்! எதற்காக இந்த வீண் பொய் எல்லாம்? நீங்கள் போயிருந்த காரியம் எனக்குத் தெரியாதா?''

"உன் மேல் ஆணை வைத்துச் சொல்லுகிறேன். இன்று நான் அதற்காகப் போகவே யில்லை. எதற்காக என் மீது இப்படி யெல்லாம் வீணாக அபாண்டமான பழி சுமத்துகிறாய்?''

"பின் எங்கே போயிருந்தீர்கள்?''

"நேற்று ராத்திரி சற்று அதிகமாகச் சாப்பிட்டு விட்டேன். சரியானபடி ஜீர்ணம் ஆகாமல் வயிறு சற்று உப்புசமா யிருந்தது. இலேசாக வலிக்கவும் செய்தது......''

"எதற்கு இந்தப் பொய்? நீங்கள் பொய் சொன்னாலும் உங்கள் முகம்தான் உண்மையைச் சொல்லுகிறதே! சாகிற வயதில் 'சங்கரா, சங்கரா' என்று பேசாமலிராமல் ஏன் இப்படி இந்தக் குடி கெடுக்கும் கள்ளைத் தேடிக்கொண்டு போகிறீர்களோ, தெரியவில்லை. காலையில் போனவர் இப்பொழுதுதானே திரும்பி வருகிறீர்கள். நான் என்ன, நீங்கள் வைத்த வேலைக்காரியா?'' என்று முகத்தைக் கோணிக் கொண்டு கிழவி கேட்டாள்.

தேவீதீன் வாய் திறக்காமல் விளக்குமாற்றை எடுத்துக் கடையைச் சுத்தம் செய்யலானான். ஆனால், கிழவி அவனுடைய கையிலிருந்த விளக்குமாற்றை 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டு, "'எங்கே போயிருந்தீர்கள்' என்பதைச் சொல்லாத வரையில் நான் உங்களை இந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க விடப் போவதில்லை. வருவது வரட்டும்'' என்று அழுத்தமாகச் சொன்னாள்.

தேவீதீன் பயந்து போய், "அதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? ஒரு பத்திரிகை ஆபீஸுக்குப் போயிருந்தேன்'' என்றான்.

கிழவி தலையில் கைகளை வைத்துக் கொண்டு, "இன்னும் அந்தக் குடி கெடுத்த பழக்கம் வந்து விட்டதா? 'இனிமேல் பத்திரிகை ஆபீஸ் பக்கமே தலைகாட்டுவதில்லை' என்று எனக்கு வாக்களித்தீர்களே, அது என்ன ஆயிற்று? அதைச் சொன்னது இந்த வாய்தானே?'' என்று அழாத தோஷமாகக் கேட்டாள்.

"விஷயத்தை முழுவதும் புரிந்து கொள்ளாமல் கோபித்துக் கொள்ளுகிறாயே...!''

"எல்லாம் எனக்குத் தெரிந்துதான் கிடக்கிறது. இந்தப் பத்திரிகைக்காரர்களுக்கே ஏதாவது ஒன்றுக்கொன்று எழுதிக் கலகத்தை உண்டு பண்ணி, ஏழை—பாழைகளைச் சிறைக்கு அனுப்பி வைப்பதுதான் வேலை. இந்தத் தள்ளாத வயதுக் காலத்தில் உங்களுக்கும் சிறைச் சோறு தின்னவேண்டும் என்று ஆசையா யிருக்கிறதா?'' என்று கிழவி கேட்டாள்.

தேவீதீன் ஒரு கவரை ரமாநாத்தின் கையில் கொடுத்து, "இந்தா அப்பா,



பணம். எண்ணிப் பார்த்துக் கொள்!" என்றான். பிறகு கிழவியைப் பார்த்து, "இந்தப் பணத்தை வசூலித்துக்கொண்டு வருவதற்காகத்தான் போயிருந்தேன். உனக்கு ஆசையாயிருந்தால் இதில் பாதியை வேண்டுமானால் நீ வாங்கிக் கொண்டு விடு!" என்றான்.

கிழவி கோபத்துடன் கண்களை உருட்டி அகல விழித்து, "அப்படியா சமாசாரம்? நீ கெடுவது போதாது என்று இவனையுமா உன்னுடன் சேர்த்துக் கொண்டு கெடுக்கப் பார்க்கிறாய்! உன் பணத்திலே தீயை வைக்க! அப்பா, நீ இந்தப் பணத்தை வாங்கிக் கொள்ளாதே! இது உன் உயிருக்கே உலை வைத்து விடும். இப்பொழுதெல்லாம் இந்தப் பத்திரிகைக்காரர்களுக்குச் சும்மா ஆட்கள் கிடைப்பதில்லை போலிருக்கிறது. ஆகையால் ஆசை காட்டி ஆளை வலையில் போட்டுக் கொள்ளப் பார்க்கிறார்கள். அப்புறம் இவர்கள் உன்னைக் கடைத் தெருவில் கொண்டு போய் மறியலுக்கு நிறுத்துவார்கள்; கோர்ட்டுக்கு இழுத்துக் கொண்டு போய் சாட்சி சொல்லச் சொல்லுவார்கள். அந்தக் காசை விட்டெறி. தொடக்கூடத் தொடாதே! உனக்கு எத்தனை ரூபாய் வேண்டுமானாலும் நான் தருகிறேன். என்னைக் கேட்டு வாங்கிக் கொள்ளு" என்றான்.

ரமாநாத் விருத்தாந்தம் முழுவதையும் விவரமாகச் சொன்ன பிறகுதான் கிழவியின் மனதுக்கு நிம்மதி ஏற்பட்டது. அவளுடைய நெரிந்த புருவங்கள் நிலைக்கு வந்தன. முகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்த அச்சமும் கடுமையும் அகன்றன. மேகத் திரைகளை விலக்கிக் கொண்டு நீல வானம் புன்னகை செய்வதுபோல, அவளுடைய முகத்திலும் புன்னகை படரலாயிற்று. "என் தம்பி, இந்தப் பணத்தில் நீ எனக்கு என்ன வாங்கித் தரப் போகிறாய்?" என்று கண்களைச் சிமிட்டிக் கொண்டு கேட்டாள்.

ரமாநாத் அந்தக் கவரை அவளுடைய முன்னிலையில் வைத்து, "இந்தப் பணம் முழுவதும் உன்னுடையதுதான், அம்மா! நான் இவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறேன்?" என்றான்.

"இந்த ரூபாயை உன் வீட்டுக்கு அனுப்புவதற்கு என்ன? நீ ஊரை விட்டு வந்து எத்தனையோ நாட்கள் ஆயிற்று. கொஞ்சங்கூட நீ இதுவரை அனுப்பவில்லையே!"

"என் வீடு இதுதானே; எனக்கு வேறு வீடு எது, அம்மா?" என்றான் ரமாநாத்.

'அம்மா' என்று ரமாநாத்தின் வாயிலிருந்து எழுந்த சொல்லைக் கேட்டதும், புத்திர சோகத்தினால் புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்த கிழவியின் உள்ளத்துக்குச் சற்று ஆறுதல் கிட்டியது. அவளுடைய ஆத்மா எத்தனையோ நாட்களாக இதே தாயன்புக்காகத் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது. இத்தனை நாட்களாக அவளுடைய கருமி உள்ளத்தில் சேர்ந்திருந்த பிரேமை, தாயின் ஸ்தனங்களில் சுரக்கும் பாலைப்போல, வெளிப்படுவதற்குத் துடியாய்த் துடித்தது.

கிழவி நோட்டுகளை ஒரு முறை எண்ணிப் பார்த்துவிட்டு, "இதிலே ஐம்பது ரூபாய் இருக்கிறது. என்னிடம் ஒரு ஐம்பது ரூபாய் வாங்கிக் கொள். 'டீ'க்கடை வைப்பதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் நம் வீட்டிலேயே இருக்கின்றன. அவற்றைக் கொண்டு நம் கடைக்குப் பக்கத்திலேயே ஒரு டீக்கடை வைத்து வியாபாரம் செய்யத் தொடங்கிவிடு. நம் கடைக்கு வரும் வாடிக்கைக்காரர்களில் எத்தனையோ பேர் அங்கே டீ சாப்பிட வருவார்கள். வியாபாரத்துக்குக் கவலையிராது. உன் செலவுக்கும் நாலு காசு கிடைக்கும்" என்றாள்.

"நான் அந்தக் கடையிலிருந்து என் கைச்செலவுக்குக் காசு வாங்கிக் கொள்ளவேணும்! என்ன?" என்று தேவீதீன் கேட்டான்.

கிழவியும் சிரித்துக் கொண்டே தேவீதீனைப் பார்த்து, "அந்தப் பகற் கனவு எல்லாம் காணாதே! நான் ஒவ்வொரு தம்பிடிக்கும் கணக்கு வைத்துக் கொள்ளவேணும்! என்னை லேசுப்பட்டவன் என்று நினைக்காதே!" என்றான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ரமாநாத் தன் அறைக்குச் சென்றான். மகிழ்ச்சியுடன் இன்று வரை அவனுக்குத் தன் சொந்த வீட்டில்கூட இம்மாதிரி மகிழ்ச்சி அனுபவிக்கும் பாக்கியம் கிட்டினதில்லை. கிழவி தன்னுடைய சொந்தத் தாய் தந்தைக்கும் மேலாகத் தன்மீது அன்பு செலுத்துவதைக் கண்டதும், ரமாநாத்துக்குக் கிடைப்பதற்கரிய பொருள் தனக்குக் கிடைத்து விட்டது போன்ற ஆனந்தம் ஏற்பட்டது.

அவன் தன் அறைக்குச் சென்று, ஸ்நானம் செய்துவிட்டு, நெற்றியில் சந்தனப்பொட்டு இட்டுக்கொண்டு பூஜைக்கு உட்கார்ந்தான். அப்பொழுது கிழவி மெதுவாக மேலே ஏறி வந்து, "அப்பா, உனக்குச் சமைப்பது என்றால் ரொம்பக் கஷ்டமாயிருக்குமே! நான் உனக்குச் சமையல் செய்து போடுவதற்காக ஒரு சமையற்காரியை ஏற்பாடு செய்திருக்கிறேன். அவள் ரொம்பவும் ஏழை. ரொம்ப ஆசாரமாக இருக்கிறவள். என்னிடம் அடிக்கடி வந்து ஒன்று இரண்டு ரூபாய் கைமாற்று வாங்கிப் போவது உண்டு. அதனால்தான் நான் சொன்னதும் 'சரி' என்று ஒத்துக் கொண்டிருக்கிறாள். என்ன, அவளை நாளையிலிருந்தே வரச் சொல்லி விட்டுமா?" என்று கேட்டாள்.

அந்தக் கிழக் கண்களில் பரிசுத்தமான, ஆழ்ந்த, தூய்மையான அன்பு ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. உயர் குலம் — கீழ் குலம் என்ற சாதி வித்தியாசம் தானாகவே ஒடுங்கி மறைந்து விட்டது. ஆகவே ரமாநாத் உண்மையான மனத்துடன், "எனக்கு எதற்குச் சமையல்காரி? அம்மாவின் கைச் சமையலைப் பிள்ளை சாப்பிடக் கூடாதா? நீதான் என் சொந்தத் தாய்க்கும் மேலானவளாக ஆகிவிட்டாயே! நான் உன் கைச் சமையலைச் சாப்பிடத் தயார்!" என்றான்.

கிழவி திடுக்கிட்டு "சிவ சிவா! அப்படியெல்லாம் சொல்லாதே! அதற்காக உன் தர்மத்தை விட்டு விடுவதா? நான் அதற்குச் சம்மதிக்கவே மாட்டேன். தர்மத்தை விட்டால் பாவம் ஏற்படுமாம்! நாங்கள் என்ன சாதி, நீ என்ன சாதி? அதெல்லாம் கூடவே கூடாது" என்றாள்.

"சாதியும் ஆயிற்று, மண்ணும் ஆயிற்று! ஆத்ம சுத்திதான் ரொம்ப ரொம்ப முக்கியமானது. உன் கைச் சமையலைச் சாப்பிடுவதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது."

"நன்றாயிருக்கிறது! உன் வீட்டார்கள் காதில் இந்தச் சமாசாரம் விழுந்தால் என்ன சொல்லுவார்கள்?"

"அவர்கள் என்ன சொல்லக் கிடக்கிறது? யார் என்ன சொன்னாலும் எனக்கு அதைப் பற்றிக் கொஞ்சங்கூட அக்கறை இல்லை. சாப்பிடுவதனால் மனிதன் ஒன்றும் தாழ்ந்த குலத்தவனாக ஆகி விடுவதில்லை. பாவம் செய்வதனால்தான் மனிதன் தாழ்ந்தவனாகிறான். அன்புடன் அளிக்கப்படும் போஜனம் பரிசுத்தமானது என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். தேவதைகள்கூட அதை அன்புடன் புசிப்பார்களாம்!" என்றான் ரமாநாத்.

கிழவியின் உள்ளத்தில் தன் சாதிப் பெருமையைப் பற்றிய உணர்ச்சியும் உயிர் பெற்று எழுந்தது. ஆகவே அவள் "எங்கள் சாதியும் ஒன்றும் தாழ்ந்த சாதியில்லை. நாங்கள் பிராமணர்கள் வீட்டுச் சாப்பாட்டைக் கூடச் சாப்பிடுவதில்லை; அன்னிய சாதியினர் தொட்ட தண்ணீரைக் கூட நாங்கள் பருகுவதில்லை; மாமிசத்தைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. இரண்டொருத்தர் திருட்டுத்தனமாக லாகிரி வஸ்துக்கள் உபயோகிக்கிறார்கள். இந்தக் கெட்ட பழக்கம் பெரிய பெரிய ஆட்களைக் கூட விடவில்லை. தர்மாத்மாக்கள் என்று பெயர் வாங்கிய ஆசாமிகள்கூடக் குடம் குடமாகக் குடிக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளேன்! — அது கிடக்கட்டும். என் கைச் சமையல் உனக்குப் பிடிக்குமோ?" என்று அன்பொழுகக் கேட்டாள்.

ரமாநாத் புன்முறுவலுடன், "அம்மா, அன்புடன் அளிக்கப்படும் ஆகாரம் எவ்வளவு சாதாரணமாயிருந்த போதிலும், அது அமிருதத்துக்குச் சமானமானதாகும். கிருஷ்ண பகவான்கூட கீதையில் இதையேதான் சொல்லியிருக்கிறார்" என்றான்.

கிழவி குபேரனுடைய நிதியே தனக்குக் கிட்டிவிட்டது போல ஆனந்தமும் எக்களிப்பும் முகத்தில் தாண்டவமாடக் கீழே இறங்கிச் சென்றாள். (தொடரும்)



போலீஸ் :— டேய், இந்த இருட்டிலே அங்கே என்ன பண்றே?

திருடன் :— இந்தச் சாவியைத் தெருவிலே கண்டு எடுத்தேனுங்க. அது இந்த வீட்டுச் சாவிதானான்னு பார்த்துக் கொடுக்கலாமுன்னு தொறந்து பார்க்கிறேனுங்க!

எடுத்துவிட வேண்டியதுதான்!






# கவலை தீர்ந்தது!

ராஜு

வத்ஸலாவுக்குப் பதினாறு வயது. அவளுக்குக் கல்யாணம் செய்யும் பொறுப்பு அவள் அண்ணன் ராமுவின் தலையில் விழுந்தது. வேலை நிமித்தமாக அவன் வேறு ஊருக்கு மாற்றல் ஆகும் சமயம், எப்படியாவது தங்கைக்குக் கலியாணம் செய்துவிட வேண்டுமென்று தீர்மானித்தான். ஆனால், அதற்குள் மாப்பிள்ளை எங்கே கிடைத்துவிடப் போகிறான் என்ற கவலை அவனுக்கு!

யாராவது ஒருவனைத் தன் தங்கைக்குக் கணவனாகத் தேடிப் பிடித்துக் கொண்டு வருமுன், அவள் அழகு முழுவதும் பிரதிபலிக்கும்படி ஒரு போட்டோ எடுக்க வேண்டியது அவசியம் என்று அவனுக்குத் தோன்றியது; அப்படியே போட்டோவும் எடுக்கப்பட்டது. போட்டோ பிரதிகளை வாங்கி வந்த அண்ணாவுடன், வத்ஸலா சிரித்துப் பேசிக்கொண்டே கவரைப் பிரித்தாள். அதிலிருந்த படத்தைப் பார்த்ததும் தனக்கு வந்த சிரிப்பை அவள் அடக்கிக் கொண்டு, "அண்ணா! போட்டோ ரொம்ப ரொம்ப ஜோர்! பலே! காதுகள்தான் எவ்வளவு அழகாக மடிந்து தொங்குகின்றன! அடாடா! கழுத்தில் போட்டிருக்கும் அந்தப் பட்டைச் சங்கிலிதான் எவ்வளவு ஜோராயிருக்கிறது......!" என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

"என்ன, வத்ஸலா! என்னவெல்லாமோ உளறுகிறாயே! காது படியவாவது, கழுத்துச் சங்கிலியாவது!" என்றான் ராமு எரிச்சலுடன்.

"அண்ணா! இந்தப் படத்தைத்தான் பாரேன்!" என்று சொல்லிக் கொண்டே, வத்ஸலா அந்தப் படத்தை ராமுவிடம் கொடுத்தாள். அதைப் பார்த்ததும் ராமுவும் விழுந்து விழுந்து சிரித்தான். போட்டோக்காரன் செய்த ஒரு சிறிய தவறுதான் இவர்களுடைய சிரிப்புக்குக் காரணமாக இருந்தது. வேறொருவருக்குக் கொடுக்க வேண்டிய அந்த நாயின் போட்டோவை, அவன் ராமுவிடம் கொடுத்துவிட்டான்!

"அண்ணா! இந்த நாய்க்குட்டி எவ்வளவு அழகாயிருக்கு! அதை எனக்கு வைத்துக் கொண்டு விளையாட வேண்டும்போலிருக்கு!" என்றாள் வத்ஸலா.

"அட அசடே! அது யாருடைய நாய்க்குட்டியோ! உனக்கு எதற்கு?"

"இல்லை அண்ணா! இதை எப்படியாவது வாங்கி வந்து விடேன்!"

"சரிதான்; அதை முதலில் திருப்பிக் கொடுத்துவிட்டு உன்னுடைய படத்தை வாங்கிக் கொண்டு வருகிறேன். அதுதான் முக்கியம்!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான் ராமு.

அடுத்த நாள் காலை அண்ணா வெளியில் சென்று ஒரு நாய்க் குட்டியுடன் திரும்பி வந்தான். வத்ஸலாவுக்கு ஒரே உற்சாகம். "அண்ணா! இது உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டாள்.

"வத்ஸலா கேட்டால் இந்த உலகத்தில் கிடைக்காததும் ஒன்று உண்டோ!" என்று சொல்லிக் கொண்டே ராமு வேலைக்குப் போய் விட்டான்.

அந்த நாய்க்குட்டியோ வந்ததிலிருந்து குரைத்துக் கொண்டே இருந்தது. தன்னிடம் சில நாட்கள் பழகினால் எல்லாம் சரியாய்ப் போகும் என்று நினைத்தாள் வத்ஸலா. அன்று சாயங்காலம் ஆபீஸிலிருந்து அண்ணா வந்ததும், அதை வெளியே அழைத்துக் கொண்டு போவோம் என்றும் அவள் திட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

இந்தச் சமயத்தில் ஒரு வாலிபன் தன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்ததை வத்ஸலா கவனித்தாள். அவன் வீட்டு வாசற்படி யருகில் வந்து நின்று, "ராமு இருக்கிறாரா?" என்று கேட்டான்.

இந்தக் குரலைக் கேட்டதும் உள்ளே இருந்த நாய் இன்னும் பலமாகக் குரைத்தது.

உடனே அந்த வாலிபன், "டாமி!" என்று கத்திக்கொண்டே உள்ளே ஓடி வந்து, அந்த நாயை அன்புடன் அணைத்துக் கொண்டான். வத்ஸலா பயந்துபோனாள்.



"அம்மா! நான் இதை அழைத்துக் கொண்டு போகிறேன். இது என்னுடைய நாய்தான்! இந்த நாயைப் பிரிந்து தனிமையில் இருக்க எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது!" என்றான் அந்த வாலிபன்.

"அது சரி! ஆனால் அண்ணா இல்லையே! இந்த நாய் உங்களுடையது என்று எனக்கு எப்படித் தெரியும்?" என்றாள் வத்ஸலா.

"இது என்ன, அம்மா! என்னைக் கண்டதும் இந்த நாய் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருவதிலிருந்தே இது என்னுடைய நாய்தான் என்று உங்களுக்குத் தெரியவில்லையா?"

"தெரியாமலென்ன! ஆனாலும் இந்த நாட்களில் திருடர்கள் நாயைக்கூட ஏமாற்றித் திருடிக்கொண்டு போய்விடுகிறார்களே! உங்களை நான் எப்படி நம்புவது?" என்று ஒரு போடு போட்டாள் வத்ஸலா.

"என்ன! என்னைத் திருடன் என்றா சொன்னீர்கள்?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் அந்த வாலிபன்.

அதே சமயத்தில், "யார், யாரைத் திருடினீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான் ராமு.


அவனைக் கண்டதும், "மிஸ்டர் ராமு! இந்த நாயை நான் என்னுடையது என்று சொன்னால், என்னைத் திருடன் என்று உங்கள் தங்கை அவமானப்படுத்துகிறாள்!" என்றான் அந்த வாலிபன்.

"அதிலென்ன சந்தேகம், குமார்! நிஜமாகவே நீ திருடன்தான்!" என்றான் ராமு.

"சரியான ஆசாமியப்பா, நீ! நேற்று என்னைக் கெஞ்சிக் கூத்தாடி இந்த நாயைக் கேட்டு வாங்கிக்கொண்டு வந்துவிட்டு......"

"அதற்காக நான் இல்லாத வேளையில் நீ இங்கே வந்து என் தங்கையின் உள்ளத்தைத் திருடிக்கொண்டு செல்வதா? அதற்குச் சரியான தண்டனை கொடுக்க வேண்டுமானால், அவளை உனக்குக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டியதுதான்!" என்று கூறி, குமாரின் கையைப் பிடித்துக் குலுக்கிச் சிரித்தான் ராமு.

அடுத்த நிமிஷம் குமார் தன்னுடைய நாய்க் குட்டியைக்கூட மறந்து வெளியேறியதும், "அண்ணா! இவ்வளவு சுலபமாக என்னுடைய கலியாணத்தை முடித்துவிட்டாயே!" என்று தலை குனிந்தபடி கூறி, சிரிக்காமல் சிரித்தாள் வத்ஸலா!




### தெரியாது!

பிரதிவாதியான வக்கீல் ஒரு சாக்ஷியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வக்கீல்:—வாதியும் பிரதிவாதியும் சண்டை போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தாயே, நீ அப்பவே ஏன் வாதிக்கு உதவி செய்யவில்லை?

சாக்ஷி:—யார் வாதி, யார் பிரதிவாதி என்று அப்போ எப்படிங்க தெரியும்?

★

### நம்ப வேண்டியதுதான்!

"நிஜமாக மானேஜர் உள்ளே இல்லையா?"

"எனக்குத் தெரியுமுங்களே, என் வார்த்தையை நீங்க நம்ப மாட்டீங்கன்னுதானே நான் உள்ளே போய் வந்து அவர் சொன்னதையே திருப்பிச் சொல்றேன்!"

★

### பார்த்துக் கொள்ளுங்கள்!

டிக்கெட் பரிசோதகர்:— ஏ ஆளு! டிக்கெட்டை எடு! ஜல்தி!

பிரயாணி:—இந்தப் பையிலேதான் வைத்திருந்தேனுங்க! எங்கேயோ தவறிடிச்சி போலிருக்குதுங்க!

பரிசோதகர்:— என்ன, போக்கிரித்தனம் பண்றே? உன் பையில் நீ வைத்திருந்ததற்கு அடையாளம் என்ன?

பிரயாணி:—இப்போ பையிலே இருக்குதான்னு நீங்களே பார்த்துக்கங்களேன்!

★

### தற்காப்பு!

ஒரு பொதுக் கூட்டத்தில் ஒரு கல் வந்து விழுந்தது. அங்கிருந்த ஒருவர் மிகவும் விரைவாகத் தம் மேல் வேஷ்டியை எடுத்துத் தலையில் கட்டினார்.

பக்கத்திலிருந்தவர் (அவரிடம்):— வேண்டாம், வேண்டாம்! தொலைந்து போகிறேன், ஸார்! யாராவது போக்கிரிப் பயலாயிருப்பான்!

முதல் மனிதர்:—நான் அவனை ஒன்றும் செய்யப் போகவில்லை, ஸார்! கல் என் தலையில் விழாமல் இருப்பதற்காக அல்லவா மேல் வேஷ்டியைத் தலையில் கட்டினேன்?

★

### நம்பிக்கை யில்லை!

வேலைக்காரன்:—என்னை நீங்கள் நம்புவதில்லை. நான் வேலையை விட்டுவிடப் போகிறேன்!

எஜமான்:—உன்னையா நான் நம்புவதில்லை? என் கொத்துச் சாவியைக்கூட உன்னிடம் தானே கொடுத்து வைத்திருக்கிறேன்?


வேலைக்காரன்:—அதனால் என்ன பிரயோசனம்? அந்தச் சாவிகளில் ஒன்றாவது சரியாக இல்லையே!












மதராஸ் ஏஜண்டு:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள்
& பாலக்காடுக்கு ஏஜண்டு:

B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்

# படுக்கையில் பிரளக்கூட அவருக்குத் துணிவு ஏற்படவில்லை

## இடைக் கீல் வாதத்தினால் இரவுகளிலெல்லாம் இன்னல் பட்டார்

## க்ருஷன்தான் வலியிலிருந்து அவரை விடுதலை செய்தது

இடைக் கீல் வாதத்தினால் அவஸ்தைப் பட்டவர்களுக்குத்தான் அதனால் ஏற்படும் வலியின் கொடுமை தெரியவரும். அதை நிவர்த்தி செய்துகொள்ள ஒரு ஔஷதத்தைக் கண்டுபிடித்தவுடனேயே அந்த நற்செய்தியை மேற்படி நோயால் அவஸ்தைப்படும் மற்றவர்களுக்குத் தெரிவிக்க ஆதங்கம் உண்டாகிறது. க்ருஷன் எங்ஙனம் நிவாரணம் அளிக்கிறது என்று அம் மனிதர் கூறுவதைக் கேளுங்கள்:—

"இடைக் கீல் வாதத்தினால் மிகவும் தீவிரமாகப் பீடிக்கப்பட்டேன். படுக்கையில் படுத்தால் படுத்தபடியேதான் கிடந்தேன். வலியினால் பிரளக்கூட முடியவில்லை. என்ன செய்வது, எந்த மருந்தைச் சாப்பிடுவது என்றே புரியவில்லை. ஒரு நாள் க்ருஷன்ஸ் அருந்தும்படி எனக்குச் சிபார்சு செய்யப்பட்டது. மிகவும் நன்றியுடன் அதை சாப்பிட ஆரம்பித்தேன். சாப்பிட்ட சில தடவைகளிலேயே குணம் தெரிந்தது. ஒரு பெரிய பாட்டில் க்ருஷன் சாப்பிட்டேன். இடைக் கீல் வாதம் இருந்த இடமே தெரியவில்லை. மறுபடி வரும் என்ற சூசனை கூட ஏற்படவில்லை. எனக்குத் தெரிந்து இடைக் கீல் வாதத்தினால் அவதியுறுபவர்களுக்கெல்லாம் க்ருஷன் சால்ட்ஸ் சாப்பிடுமாறு யோசனை சொல்வேன்."—ஜீ.ஏ.வி.

குடல், மூத்திர கோசம் ஆகியவைகளுக்கு விருவிருப்பை அளிக்கவும் சுகமாக, சரியாக ஜீரண சக்தி ஏற்படுவதற்கும் உதவும் இயற்கை உப்புத் தாதுக்களின் சேர்க்கையே க்ருஷன். தேகத்தின் உட்புறத்திலும், இரத்த ஓட்டத்திலும் சுத்தத்தை நிலவச் செய்கிறது. சுத்தமான புதிய இரத்தத்தை ஊறச் செய்து, உங்கள் உடலிலுள்ள இணைப்பிலெல்லாம் பாயச் செய்கிறது. இடைக் கீல் வாதம், முடக்கு வாதம், தலை வலி, அஜீரணம் ஆகிய நோய்கள் உங்களை அண்டாது.

எல்லா கெமிஸ்டுகளிடமும், வியாபாரிகளிடமும் க்ருஷன் சால்ட்ஸ் பாட்டில் ஒன்று ரூ. 1-10-0 வீதம் கிடைக்கும்.




Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladen's Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

## மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நம்பர் 80 வரை நூல்கள்.

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள் எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

தற்போது நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டுள்ளதால், நூல் தேவையானவர்கள் தங்கள் மாகாணம் அல்லது சமஸ்தான டெக்ஸ்டைல் கண்ட்ரோல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

குழந்தைக்கு முக்கியமானது **பேபி கிரைப்** குழந்தைக்கு ஆரோக்கியமளிப்பது

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்.

## அயோடிசால்

மிகச் சிறந்த ரத்த சுத்தி மருந்து

இது தேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி, தேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும். ரத்தத்தை சுத்தி செய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

## சைபால்

முகப்பரு, சேற்றுப் புண் சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:

## திசௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

ஏஜண்டுகள்:—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்—பெஜவாடா, பேர்ஹாம்பூர் & சிகந்தராபாத்; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி

சிலோன் ஏஜண்டுகள்:—M. O. A. கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொழும்பு

REGD. No. M. 4392

License No. 18
Licensed to post without prepayment




ராஜா ஸ்னே,
ஹேர் ஆயில், கஸ்தூரி ஸோப்.

MANYAM & CO., MADRAS, BANGALORE, BOMBAY.

பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு மோடி ஸ்ட்ரீட், போர்ட். இலங்கைக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்
மெஸ்ஸர்ஸ். துரை, அருள் & கோ., லிட்., 93, கெய்ஸர் தெரு, கொழும்பு